




விலை ரூபா 40

பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 31 வள்ளுவ ஆண்டு 2055
கார்த்திகை மாதம் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (19.11.2024)







# 21 பேர் கொண்ட அமைச்சரவை பதவிப்பிரமாணம்

## ஜனாதிபதியிடம் முக்கிய பொறுப்புகள்



**இராமலிங்கம் சந்திரசேகரன், சாவித்ரி போல்ராஜ் ஆகியோருக்கும் அமைச்சுப் பொறுப்புக்கள்**

**முஸ்லிம்கள் இல்லாத அமைச்சரவை**

**ஆர்.மனோ**

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை நேற்று (18) ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டது.

புதிய அமைச்சரவை 21 பேருக்கு மட்டுப்படுத்தப்படுவதோடு பாதுகாப்பு, நிதி ,திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி, டிஜிட்டல் பொருளாதாரம் ஆகிய அமைச்சுக்கள் ஜனாதிபதியின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன.

புதிய அரசாங்கத்தின் பிரதமராக கலாநிதி ஹரிணி அமரசூரிய பதவிப் பிரமாணம் செய்துகொண்டதுடன் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் பிரதமர் உட்பட 21 பேர் பதவி பிரமாணம் செய்து கொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் 10:30 அளவில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இந்தப் புதிய அமைச்சரவையில் இரு தமிழர்கள் அமைச்சர்களாக சத்திய பிரமாணம் செய்து கொண்டார்கள்.

கடந்த செப்டம்பர் 21ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்

02

## 10வது நாடாளுமன்றத்தின் புதிய அமைச்சரவை

- **ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க** – பாதுகாப்பு, நிதி ,திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி, டிஜிட்டல் பொருளாதார அமைச்சர்
- **பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய** – கல்வி, உயர்கல்வி, தொழிற்கல்வி அமைச்சர்
- **விஜித ஹேரத்** – வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுற்றுலா அமைச்சர்
- **பேராசிரியர் சந்தன அபேரத்ன** – பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர்
- **கே.டி லால்காந்த** – விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்
- **சரோஜா சாவித்ரி போல்ராஜ்** – மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர்
- **சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார** – நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்
- **இராமலிங்கம் சந்திரசேகரன்** – கடற்றொழில், நீரியல் வள மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்
- **அனுர கருணாதிலக்க** – நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சர்
- **சுனில் ஹந்துன்நெத்தி** – கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்
- **பேராசிரியர் உபாலி பன்னிலகே** – கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு, சமூக வலுவூட்டல் அமைச்சர்
- **ஆனந்த விஜேபால** – பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர்
- **பிமல் ரத்நாயக்க** – போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்
- **பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி** – புத்த சாசனங்கள், சமய மற்றும் கலாசார விவகார அமைச்சர்
- **டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ** – சுகாதார மற்றும் ஊடக அமைச்சர்
- **சமந்த வித்யாரத்ன** – பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்
- **சுனில் குமார கமகே** – இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்
- **வசந்த சமரசிங்க** – வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்
- **பேராசிரியர் கிருஷாந்த அபேசேன** – விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்
- **பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ** – தொழில் அமைச்சர்
- **பொறியியலாளர் குமார ஜயகொடி** – வலுசக்தி அமைச்சர்
- **டொக்டர் தம்மிக பட்டபெதி** – சுற்றாடல் அமைச்சர்

## வரம்பற்ற அதிகாரத்தை பொறுப்புடன் கையாளுங்கள்

**எஸ்.டொரின்**

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் அதிக அதிகாரங்கள் இருப்பதாகக் கூறிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அனைத்து அமைச்சர்களும் தமது அதிகார வரம்புகளை அறிந்து பொறுப்புணர்வோடு செயற்படுவார்கள் என தான் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையின் பதவிப்பிரமாண நிகழ்வு நேற்றைய தினம் (18) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது அமைச்சர்களின் பதவிப் பிரமாணத்தை தொடர்ந்து ஜனாதிபதி உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து



தெரிவித்த ஜனாதிபதி, பொதுமக்களின் எதிர்ப்பார்ப்புக்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் பொறுப்பாகும். அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரம்பற்ற அதிகாரத்தை பொறுப்புடன் கையாள வேண்டும்.

02

## புதிய அரசாங்கத்தின் 43 எம்.பிக்கள் எதிர்க்கட்சி வரிசையில்

**கனுாஷியா புஷ்பகுமார்**

தேசிய மக்கள் சக்தியில் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் 159 பேருக்கு நாடாளுமன்றத்தின் ஆளும் கட்சியில் இருக்கைகளை வழங்க முடியாத ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, ஆளும் கட்சியின் 43 உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சியின் பக்கம் இருக்கைகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆளும் கட்சியில் 116 உறுப்பினர்களுக்கு மாத்திரமே இருக்கைகள் காணப்படுகின்றன.

02

## மலையக அரசியல் வரலாற்றில் முதல் தமிழ்ப் பெண் அமைச்சர்

**சுப்ரமணியம் நிஷாந்தன்**



தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சராக சரோஜா சாவித்ரி போல்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

02

## தேசியப் பட்டியலில் ரவி ; ரணில் கூட்டணியில் தொடரும் இழுபறி

**கனுாஷியா புஷ்பகுமார்**

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சிலிண்டர் சின்னத்தை பிரதிநிதித்துவப்படுத்திய புதிய ஜனநாயக முன்னணி சார்பில் தேசியப் பட்டியலுக்கு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க பெயரிடப்பட்டுள்ளதை தேர்தல்கள் ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

“ஒருவன்” நாளிதழுக்கு தேர்தல்கள்

02

## வரலாற்றில் முதல் தடவை: விழிப்புலனற்ற பட்டதாரி எம். பியாகிறார்



**கனுாஷியா புஷ்பகுமார்**

இலங்கை அரசியலில், நாடாளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாக விழிப்புலனற்றவர் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்.

இலங்கை பார்வையற்ற பட்டதாரி சபையின் தலைவர் சுகத் வசந்த டி சில்வா என்பவரே இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியிலிருந்து தேசியப்பட்டியல் உறுப்பினராக இவ்வாறு நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார்.

பலப்பிட்டிய, கொடகெதர பிரதேசத்தில் 1967ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் திகதி பிறந்த

02

## ரவி செனவிரத்னவின் மனு நிராகரிப்பு

**கனுாஷியா புஷ்பகுமார்**



குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான ரவி செனவிரத்னவினால் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை (18) நிராகரித்துள்ளது.

வாகன விபத்து சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தாம் விளக்கமறியலில்

02

## வாக்குறுதிகளை நிறைவேற்ற செய்வதே எங்கள் முதல் பணி



“தற்போதைய அரசாங்கத்திற்கு மக்களால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மக்கள் வழங்கிய இந்த ஆணையை ஐக்கிய மக்கள் சக்தி மதிக்கிறது. தற்போதைய, அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்காக நாட்டு மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் செயல்பட எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது.” என ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான

02



## பராமரிப்பற்ற நிலையில் சுனாமி கோபுரங்கள் : விரக்தியில் மக்கள்

**து.சிந்துஜா**

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரழிவு ஒவ்வொரு வருடமும் நினைவுகூரப்படும் அதேவேளை, அதனைத் தொடர்ந்து மக்களைக் காக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்ட சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள் பராமரிப்பின்றி இருப்பதாகவும் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் தமது விரக்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

பல வருடங்களாக இக் கோபுரங்களில் எதுவித திருத்தமோ பராமரிப்பு பணிகளோ மேற்கொள்ளப்படவில்லை என அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தென் மாகாணத்தில் காலி, அஹங்கம, பலபிடிய, அம்பலாங்கொடை, ஹிக்கடுவ, ரத்கம, தெல்வத்த மற்றும் உனவத்துன ஆகிய இடங்களிலும் மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் என மொத்தம் 24 சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள் உள்ளன.

வெலிகம பொலிஸ் மைதானம், திக்வெல்ல பொலிஸ் மைதானம், மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகம், தெவிநுவர

02

# ஜனாதிபதியின் இந்திய விஜயம் குறித்து அமைச்சர் விஜித ஹேரத்

ஆர்.மனோ

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அடுத்த மாதம் (டிசம்பர்) நடுப்பகுதியில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்வார் என வெளிவிவகார அமைச்சராக பதவியேற்றுள்ள விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சரவை நேற்று பதவியேற்றிருந்தது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சரிடம் ஜனாதிபதியின் இந்திய விஜயம் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியிருந்தனர்.

இதற்கு பதிலளித்துப் பேசிய அமைச்சர், அடுத்த மாதம் (டிசம்பர்) நடுப்பகுதியில் இந்தியா செல்வதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்பார்த்துள்ளார்.

இந்த பயணத்தின் போது இந்திய பிரதமர் உள்ளிட்ட முக்கிய தலைவர்களை சந்திக்கவும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

முன்னதாக கடந்த செப்டம்பர் 21ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்க வெற்றிபெற்றிருந்தார்.

இதனையடுத்து இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி அநுரகுமாரவிற்கு அந்நாட்டு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்திருந்தார்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றபெற்றதுடன், முதல் இராஜதந்திரியாக இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்கவை சந்தித்து வாழ்த்து கூறியிருந்தார்.

மேலும், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் திஸாநாயக்கவைச் சந்தித்த முதல் வெளிநாட்டுப் பிரமுகர் என்ற பெருமையைப் பெற்றார்.

தனது இலங்கை பயணத்தின் போது இந்திய பிரதமரின் அழைப்பை எஸ்.ஜெய்சங்கர் ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தார்.

முன்னதாக இந்த ஆண்டு முற்பகுதியில் (பெப்ரவரி மாதம்) அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் இந்தியா சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இந்தக் கோலத்தில் பார்க்கவா என் மகளை பாடசாலை அனுப்பினேன்?

கனுஷியா புஷ்பகுமார்

மூன்று மாதங்களுக்கு முன்னர் வென்னப்புவ பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் இரு ஆசிரியைகளின் கடுமையான தாக்குதலுக்கு இலக்காகி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 16 வயது மாணவி உயிரிழந்த சம்பவம் தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.

துயரம் தாங்க முடியாத நிலையில் மாணவியின் தாயார் அழுது கவலையை வெளிப்படுத்தும் காணொளிகள் ஊடகங்களில் வெளியாகியிருந்த நிலையில் அது பலரது மனதை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

“எவ்வளவு கஷ்டங்களுக்கும் சிரமங்களுக்கும் மத்தியில் நாங்கள் உன்னை படிக்க வைத்தோம், ஏதாவது தவறு செய்திருந்தால் சிறிதாக தண்டித்து விட்டிருக்கலாமே! இந்த நிலையில் பார்ப்பதற்கா என்னுடைய மகளை நான் பாடசாலைக்கு அனுப்பினேன்?” என ரமேஷாவின் தாய் அவருடைய சடலத்திற்கு அருகிலிருந்து கதறி அழுவது அருகில் இருந்த அனைவரையும் சோகத்தில் தள்ளியது.

பல சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் துரித விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.



ஆசிரியைகள் தாக்கி உயிரிழந்த மாணவியின் தாய் உருக்கம்

2025ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதரச் சாதாரண தரப் பரீட்சைக்கு முகம்கொடுக்க எதிர்பார்த்திருந்த 10ஆம் வகுப்பில் கல்வி கற்கும் ரமேஷா தினிதி என்ற மாணவி, மற்றுமொரு மாணவியுடன் வகுப்பறையை விட்டு வெளியேறிய பின்னர், மீளவும் திரும்பி வருவதற்கு 20 நிமிடங்களுக்கு மேல் ஆன காரணத்தினால் அவரது வகுப்பு ஆசிரியை மற்றும் மற்றொரு ஆசிரியையால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். மாணவியின் பிரேதப் பரிசோதனை சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டு சடலம் உறவினர் களிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் மூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவே மாணவியின் மரணத்திற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் ஒன்பதாம் திகதி இத்தாக்குதல் இடம்பெற்றதுடன், தாக்குதலுக்கு உள்ளான மாணவி ஆரம்ப சிகிச்சைக்காக மாரவில வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்தார். மூன்று மாத காலமாக தொடர்ந்த சிகிச்சைகள் பலனின்றி றாகம போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மாணவி உயிரிழந்துள்ளார்.

சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில், சம்பவம் தொடர்பாக மாணவியிடம் வாக்குமூலம் பெறுவதற்காக மூன்று முறை பொலிஸார் வைத்தியசாலைக்குச் சென்றபோதும், தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்ததால், அது பலனளிக்கவில்லை.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 39 மற்றும் 57 வயதுடைய இரு ஆசிரியைகளும் செப்டம்பர் 13 ஆம் திகதி நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றின் உத்தரவின் பேரில் நேற்று 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி......

### 21 பேர் கொண்ட...

அநுரகுமார திஸாநாயக்க வெற்றிபெற்று ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக பதவியேற்றார்.

இதனையடுத்து செப்டம்பர் 25ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதுடன், பொது தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, நவம்பர் 14ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றிருந்தது. இதில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றிபெற்று 159 ஆசனங்களை கைப்பற்றியிருந்தது.

இந்நிலையிலேயே, நேற்றைய தினம் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டது. இதன்படி, பிரதமராக கலாநிதி ஹரினி அமரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

21 பேர் அமைச்சர்களாக பதவிப்பிரமானம் செய்துகொண்டனர். புதிய அமைச்சரவையில் தமிழர்களான சரோஜா சாவித்திரி போல்ராஜ் மற்றும் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இதன்போது, இராமலிங்கம் சந்திரசேகர் தமிழ் தேசிய உடையில் வருகை தந்திருந்ததுடன், தமிழ் மொழியில் உறுதிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார். இந்தப் பதவியேற்பு நிகழ்வில், பங்கேற்ற அமைச்சர்கள் பலரும் மேற்கத்திய ஆடைகள் அணிந்திருந்ததையே காண முடிந்தது..

ஒரு சிலர் மட்டுமே தேசிய ஆடை அணிந்து நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். இந்த அமைச்சரவையில் முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்த யாருக்கும் பதவி வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வரம்பற்ற அதிகாரத்தை...

மக்களின் கடின உழைப்பு மற்றும் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் வெற்றியடையச் செய்யும் வகையில் நல்லாட்சி இருக்க வேண்டும். ஊழல் அற்ற ஆட்சியை முன்னெடுப்பதே எமது நோக்கமாகும். நாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பெரும்பான்மை அதிகாரம் ஆட்சியாளர்களுக்கு கிடைத்தது.

அதிகாரத்தின் ஊடாக மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். மக்கள் வழங்கியுள்ள அதிகாரமானது பொறுப்பு வாய்ந்தது. மக்களுக்கும் பொறுப்பு உள்ளது. எந்தவொரு அதிகாரம் வழங்கப்பட்டாலும் அதில் பொறுப்புடன் செயற்பட வேண்டியுள்ளது.

அத்துடன், பல புதியவர்கள் இம்முறை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பல்வேறு தொழில்சார்ந்தவர்களை மக்கள் தெரிவு செய்துள்ளார். மக்களின் எதிர்ப்பார்ப்புக்களை பூர்த்தி செய்யக்கூடியவர்கள் என்ற நம்பிக்கையுடனேயே மக்கள் அவர்களை தெரிவுசெய்துள்ளனர்.

”வெற்றி பெரியது, அந்த வெற்றிக்காக நம் மீது சுமத்தப்பட்ட பொறுப்புகள் சமமானவை.”

பிரிவினை அரசியல் இனியும் தேவையில்லை என்பதை இத்தேர்தல் நிஷரூபித்துள்ளது. தேசிய மக்கள் சக்திக்கு வலுவான மக்கள் ஆணையை வழங்க முயற்சித்த அனைத்து மக்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசிய மக்கள் சக்தியின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு அனைத்து மக்களின் ஆதரவும் தேவை என தெரிவித்த ஜனாதிபதி, தோற்றவர்களை காயப்படுத்திய வரலாற்றை மாற்றி புதிய அரசியல் கலாசாரத்தை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இத்தேர்தலில் கருத்துகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் சமூக ஊடக செயற்பாட்டாளர்களாக முன்வந்து செயற்பட்ட இளம் சமூகம் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளனர். அவர்களுக்கு நன்றி.

மேலும் இந்தத் தேர்தலில் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் எழுந்து நின்றதாகவும், அவர்கள் அனுபவிக்கும் அடக்குமுறையே இதற்குக் காரணம். இந்தத் தேர்தல் முடிவு அவர்களின் சுதந்திர பேச்சு எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, பிரஜைகளுக்கு பகுதியளவு சுதந்திரத்தை வழங்க தாம் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. இதன்பின்னர் நாம் வெற்றிகரமான முறையில் அனைத்து வேலைத்திட்டங்களையும் முன்னெடுப்பதற்கு எதிர்ப்பார்த்துள்ளோம். இலங்கையை மறுமலர்ச்சி யுகத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

### பராமரிப்பற்ற நிலையில்...

மீன்பிடித் துறைமுகம், பொல்ஹேன சுமனராமய ஆலய மைதானம் மற்றும் மாத்தறை மாவட்டத்திலுள்ள தலால தெற்கு மகா வித்தியாலயம் மற்றும் கிரிந்த முஸ்லிம் மகா வித்தியாலயம், தங்காலை விசுத்தாராமய மகா வித்தியாலயம், தங்காலை பொலிஸ் மைதானம், குடவெல்ல மீன்பிடித் துறைமுகம், ரெகாவா ஆரம்பப் பாடசாலை, ஆகியன குறிப்பிடத்தக்க இடங்களாகும்.

அண்மையில் அஹுங்கம ஷரிபுத்ரா மகா வித்தியாலயத்திலுள்ள சுனாமி எச்சரிக்கை கோபுரம் இடிந்து விழும் நிலையில், பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாழடைந்த நிலையில் அகற்றப்பட்டது.

நாட்டின் கரையோரப் பகுதிகளில் 77 சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான திருத்தம் மற்றும் பராமரிப்புகளை கொழும்பு தலைமை அலுவலகம் மேற்பார்வையிடுவதாகவும் காலி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஆனால். நிதிப் பற்றாக்குறையினால் பராமரிப்பு பணிகளில் தாமதம் ஏற்பட்டு வருவதாகவும் அத்துடன் சூரிய சக்தியால் இயங்கும் பேட்டரிகள் காலாவதி திகதியை கடந்துவிட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### புதிய அரசாங்கத்தின்...

எதிர்வரும் 21ஆம் திகதி 10ஆவது நாடாளுமன்றம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் அன்றைய தினம் தான் விரும்பிய வகையில் நாடாளுமன்றத்தில் இருக்கை கொள்ள முடியும்.

எனினும், அதன் பின்னர் சரியான முறையிலான இருக்கைகளை நாடாளுமன்றத்தில் தயார்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மலையக அரசியல்...

இதன்போதே மகளிர் விவகார மற்றும் சிறுவர் விவகார அமைச்சராக சரோஜா சாவித்ரி போல்ராஜ், ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

மலையக அரசியல் வரலாற்றில் முதலாவது தமிழ்ப் பெண் அமைச்சர் என்ற பெருமையை இதன்மூலம் அவர் பெற்றார்.

1947ஆம் ஆண்டுமுதல் இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று வருகிறது. இதுவரை நடைபெற்றுள்ள நாடாளுமன்றத் தேர்தல்களில் மலையகத் தமிழர்கள் சார்பில் எந்தவொரு பெண் வேட்பாளரும் நாடாளுமன்றத்துக்கு தெரிவானதில்லை.

முதல் முறையாக இம்முறையே மூன்று பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலையகத்திலிருந்து தெரிவாகியுள்ளனர். இவர்களில் சரோஜா சாவித்ரி போல்ராஜ், அமைச்சரவை அந்தஸ்முள்ள அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் மலையகத்திலிருந்து தெரிவான முதல் பெண் அமைச்சராக அவர் சாதனைப் படைத்துள்ளார்.

இதேவேளை, அம்பிகா சாமுவேல், கிஷ்ணன் கலைச்செல்வி ஆகியோரும் இம்முறை மலையகத்திலிருந்து தேசிய மக்கள் சக்தியின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### தேசியப் பட்டியலில் ரவி...

ஆணைக்குழு உயர்மட்ட அதிகாரியொருவர் இதனை உறுதிப்படுத்தினார்.

10ஆவது நாடாளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்று நிறைவடைந்த நிலையில்,தேர்தல் முடிவுகளின்படி, புதிய ஜனநாயக முன்னணிக்கு இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்திருந்தன.

அதற்கமைய, குறித்த தேசியப்பட்டியலுக்கு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க பெயரிடப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், மற்றைய தேசியபட்டியல் உறுப்பினர் தெரிவு குறித்து விரைவில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவுள்ளதாக தெரியவருகிறது.

2024 பொதுத் தேர்தலில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணி 500,835 வாக்குகளைப்பெற்று 2 தேசியப்பட்டியல் ஆசனங்களைக் கைப்பற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணியின் இரண்டு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளால் கட்சிக்குள் முரண்பாடுகள் தீவிரமாகியுள்ளதாகவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

### வாக்குறுதிகளை நிறைவேற்ற...

எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த அவர், மேலும் கூறியதாவது

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்மட்டத்திற்கு கொண்டு வந்து நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த, மக்களுக்காக அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்வதே எதிர்க்கட்சியின் முதன்மை பணியாகும்.

நாட்டை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லவோ, நாட்டின் பொருளாதாரத்தை அழிக்கவோ, அல்லது குறுகிய அரசியல் நலன்களின் அடிப்படையில் செயல்படவோ ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் செயல்படாது. ஆனால் அரசாங்கம் தவறான பாதையில் செல்லும் போது, அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்.

கடன்களை செலுத்தும் இயலுமையை அதிகரிப்பது, வருமான மூலங்களை அதிகரிப்பது, உற்பத்தியை அதிகரிப்பது, ஏற்றுமதியை அதிகரிப்பது, கல்வியை மேம்படுத்துவது, விவசாயத்தை மேம்படுத்துவது, பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவது, சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது, வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான தீர்வுகள் ஜனநாயகம் பாதுகாக்கப்படல் போன்ற விடயங்களில் மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

அவ்வாறே, ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த ஆணையை உரிய முறையில் அமுல்படுத்துவதற்காக கூட்டு அரசாங்கத்தை அமைப்பதற்குப் பதிலாக தனியொரு அரசாங்கத்தை அமைப்பதற்கான அதிகாரத்தை வழங்குமாறு ஜனாதிபதி மக்களிடம் கேட்டுக்கொண்டார். எனவே தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தை வழங்கினர். தமக்கு கிடைத்த கூடிய அதிகாரத்தை முறையாக செயல்படுத்தி மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்க அரச நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறோம்.

விமர்சனங்களுக்கு அப்பால் சென்று, பாராளுமன்ற குழுக்களில் பங்களித்து, வலதுசாரி முகாமின் கொள்கைகளை பாதுகாத்துக் கொண்டு, ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்களின் அபிலாஷைகளைப் பாதுகாத்து, பாராளுமன்றத்தில் அவர்களின் அபிலாஷை களைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயற்படுவோம். பாராளுமன்றத்தில் அதிகாரங்களுக்கிடையிலான தடைகள் மற்றும் சமன்பாடுகளை ஏற்படுத்த ஐக்கிய சக்தியின் பாராளுமன்ற குழு பாராளுமன்றத்தில் செயற்படும்.

வலதுசாரிக் அரசியல் கொள்கையை பின்பற்றும் தரப்பினர் இரண்டாக பிரிந்ததால் அம்முகாமை பின்பற்றும் மக்கள் வாக்களிக்கவில்லை. இந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் கிட்டத்தட்ட 60 சதவீதம் ஆனோரே வாக்களித்துள்ளனர். இந்த ஆண்டு பொதுத் தேர்தலில் ஜனாதிபதியை பிரதிநிதித்துவப்படுத்தும் முகாமுக்கு வலதுசாரி கொள்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் குறிப்பிட்ட தரப்பினரும் வாக்களித்துள்ளனர். வலதுசாரி முகாம் இரண்டாக பிளவுபட்டுள்ளதால் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் எங்கள் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு கட்சி ஓரிரு தேர்தல்களில் தோல்வியடைந்த மாத்திரத்தில் அது அரசியலில் அடுத்துச் செல்லப்படாது. எந்த கட்சி வெற்றி பெற்றாலும் அந்த வெற்றி என்றென்றும் நிலைக்காது. வெற்றி தோல்விகள் நிரந்தரமானவை அல்ல. இலங்கையின் அரசியல் கலாசாரம் புதுப்பிக்கப்பட்டால் மட்டுமே வெற்றிகளைப் பெற முடியும்.

### ரவி செனவிரத்னவின்...

வைக்கப்பட்டதன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பை வழங்குமாறு கோரி ரவி செனவிரத்ன இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் இந்த மனு நேற்று திங்கட்கிழமை அழைக்கப்பட்டிருந்தது.

இதன்போது, ஆட்சேபனையை வெளிப்படுத்திய பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திஸ்னா வர்ணகுல, இந்த மனு உயர் நீதிமன்ற விதிகளுக்கு அமைவாக தாக்கல் செய்யப்படவில்லை என சுட்டிக்காட்டியதுடன், இந்த மனுவை பரிசீலிக்க முடியாது என்றும் வாதிட்டார்.

சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை ஆராய்ந்த உயர் நீதிமன்ற அமர்வு, எதிர்மனுதாரரின் ஆரம்ப ஆட்சேபனையை ஏற்று மனுவை தள்ளுபடி செய்ய தீர்மானித்தது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர், வெள்ளவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் குழு மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி வெள்ளவத்தை பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற வாகன விபத்து சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸ ாரால் தாம் கைது செய்யப்பட்டு, கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதாக ரவி செனவிரத்ன தமது மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார்.

பிணையில் விடுவிக்க சட்டத்தில் இடமிருந்த போதும் தம்மை விளக்கமறியலில் வைத்ததன் மூலம் பொலிஸ ார் தனது அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு கோரி அவர் இந்த மனுவை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### வரலாற்றில் முதல் தடவை...

இவருக்கு தற்போது 57 வயதாகும்.

ஐந்தாம் வகுப்பில் கிரிக்கெட் விளையாடச் சென்ற அவர் கண்ணில் பந்து பட்டதால் பார்வைக் குறைபாடு ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தின் பின்னர் முற்றிலும் பார்வையை இழந்த, அதன் பின்னர் மேலதிக கல்விக்காக இரத்மலானை பார்வையற்றோர் கல்லூரியில் சேர்க்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, பல்கலைக்கழகத்தில் முதல் வகுப்பில் சித்தியடைந்த சுகத் வசந்த டி சில்வா, கொழும்பு பல்கலைக்கழகத்தின் மாணவர் வழிகாட்டி அலுவலகத்தில் சிறிது காலம் பணியாற்றினார்.

பின்னர், சமூக சேவைகள் அமைச்சின் அதிகாரியாக 25 வருடங்கள் நீண்ட சேவையாற்றிய சுகத் வசந்த டி சில்வா நாடாளுமன்ற தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் நோக்கில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

உயர்தர கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதே மக்கள் விடுதலை முன்னணியில் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த சுகத் வசந்த, தனது அரசியல் வாழ்க்கையில் தற்போது 40 வருடங்களை நிறைவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்றுக்கு ஆளுங்கட்சியில் 21 அதிபர், ஆசிரியர்கள் தெரிவு

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட 21 அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

புதிய நாடாளுமன்றத்துக்கு கல்வியாளர்கள் அதிமாக தெரிவாகியுள்ளதால் நாடாளுமன்றச் செயல்பாடுகள் மற்றும் சட்டமியற்றும் செயல்முறைக்கு இவர்களிடமிருந்து அதிகமான பங்களிப்புகள் கிடைக்கப்பெறும் என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள அதிபர் மற்றும் ஆசிரியர்களின் விவரங்கள் வருமாறு,

சாந்த பத்மகுமார, மஞ்சுள சுரவீர ஆராச்சி, பத்மசிறி பண்டார, ரத்னசிறி சுனில், சுஜீவ திஸாநாயக்க, சந்தன தென்னகோன், சஞ்சீவ ரணசிங்க, நந்த பண்டார, மஞ்சுளா ரத்நாயக்க, ருவன் விஜேவீர, சதுரி கங்கானி, ஆறுமுகம் ஜெகதேஸ்வரன், ராஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, ரொஷான் அக்மீமன, முனீர் முலாஃபர், ஹேமாலி வீரசேகர, உபுல் கித்சிறி, டி.கே.ஜெயசுந்தர, எஸ். பிரதீப், அரவிந்த செனரத், ருவன் மாபலகம ஆகியோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

கல்வியில் அவர்களின் கூட்டு அனுபவத்தின் ஊடாக கல்வித் துறையின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கைகளை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிப்பார்கள் என்றும் தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள 159 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 43 உறுப்பினர்கள் எதிர்க்கட்சிகளுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்படும் பகுதிலேயே ஒதுக்கப்படும் என நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளுங்கட்சிக்கான வரிசையில் 116 ஆசனங்கள் ஒதுக்கப்படும் என்பதுடன், ஏனைய அனைத்து உறுப்பினர்களும் எதிர்க்கட்சிக்கான பகுதிலேயே அமர்வார்கள்.

# பதவியேற்ற கையோடு கடமைகளையும் பொறுப்பேற்றார் விஜித ஹேரத்

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சராக விஜித ஹேரத் நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நியமிக்கப்பட்ட நிலையில், நேற்று பிற்பகல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் எளிமையானதொரு வைபவத்தில் தனது கடமைகளை அவர் பொறுப்பேற்றார்.



இந்நிகழ்வில் அமைச்சின் உயர் அதிகாரிகள் மாத்திரமே கலந்துகொண்டனர்.

அமைச்சர் விஜித ஹேரத் 2000ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்ற உறுப்பினராக கம்பஹா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில், நாடாளுமன்றத் தேர்தல் வரலாற்றில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சர் விஜித ஹேரத், கடந்த 2005ஆம் ஆண்டு அமையபெற்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் சிறிது காலம் கலாச்சார விவகாரங்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சராக பணியாற்றியுள்ளதுடன், நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு முன்னரான ஒன்றரை மாதகாலம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் விஜித ஹேரத் களனிப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டதாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மதத்தைக் கொண்டு அமைச்சர்களை நியமிக்க கோருவது நியாயமில்லை

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க சரியான நபர்களை சரியான அமைச்சுகளுக்கு நியமித்துள்ளார் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது என தேசிய மக்கள் சக்தி எம்.றிஸ்வி சாலி தெரிவித்தார்.



அவர் மேலும் கூறுகையில்:

மற்றவர்களை விட அவர்களின் திறன்கள் மற்றும் பங்களிப்புகளில் அதிக நுண்ணறிவு கொண்ட ஒருவராக, அவரது முடிவுகள் சந்தேகத்திற்கு இடமின்றி தகுதியில் வேரூன்றியுள்ளன.

மதத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஒரு அமைச்சரை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் தேவையற்ற பிளவுகளை தூண்டி விட்டு நாம் முன்னேற வேண்டிய ஒற்றுமையையே குலைத்துவிடும் அபாயம் உள்ளது. மத, இன வேறுபாடுகள் இன்றி அனைவருக்கும் சிறந்த இலங்கையை கட்டியெழுப் புவதற்கான அவர்களின் தொலைநோக்கு மற்றும் அர்ப்ப ணிப்பை நாங்கள் நம்பியதன் காரணமாகவே நாங்கள் அவர்களைத் தெரிவு செய்தோம். குறிப்பிட்ட அமைச்சுக்களை யார் வகிக்க வேண்டும் என்று நாம் நினைக்கின்றோம் என்ற பிரிவினையான விவாதங்களால் திசைதிருப்பப்படாமல், முடிவுகளை வழங்குவதற்கான இடத்தை இந்த அரசாங்கத்திற்கு வழங்குவதன் மூலம் அந்த நம்பிக்கையை மதிப்போம் என்றார்.

# மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகளுக்கு தடை

கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் என்பன இன்று (19) நள்ளிரவுக்குப் பின்னர் நடாத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன், குறித்த அறிவுறுத்தல்களை பின்பற்றாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சை திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சையானது எதிர்வரும் 25ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வட மாகாண ஆளுநரைச் சந்தித்த வட பிராந்திய கட்டளைத் தளபதி



வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை இலங்கைக் கடற்படையின் வட பிராந்திய கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் துஷார கருணதுங்க நேற்று திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது யாழ். தீவுப் பகுதி மக்களின் கடல் போக்குவரத்து மற்றும் தீவுகளில் வசிக்கும் மக்களுக்கான வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கைக் கடற்படை முன்னெடுத்துள்ள செயற்பாடுகளின் முக்கியத்துவம் தொடர்பாக ஆராயப்பட்டது.

# ஆளுங்கட்சியின் முதலாவது நாடாளுமன்ற குழுக் கூட்டம்

## பெண் ஒருவரை சபாநாயகராக நியமிக்க உத்தேசம்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

புதிய நாடாளுமன்றத்தில் சபை முதல்வராக அமைச்சர் விஜித ஹேரத்தையும் ஆளுங்கட்சியின் கொறடாவாக கே.டி.லால் காந்தவையும் நியமிக்க தேசிய மக்கள் சக்தி ஆலோசனைகளை நடத்தியுள்ளது.

புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நாளைமறுதினம் 21ஆம் திகதி நடைபெற உள்ளது. காலை 11.30 மணிக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு சம்பிரதாய பூர்வமான வரவேற்பு அளிக்கப்பட்டு ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையுடன் நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகும்.

புதிய சபாநாயகர் தெரிவும் 21ஆம் திகதி இடம்பெறும். புதிய சபாநாயகராக பெண் ஒருவரை நியமிக்கும் ஆலோசனைகளை தேசிய மக்கள் சக்தி நடத்தியுள்ளதாக அறிய முடிகிறது.

நாளை 20ஆம் திகதி ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டம் இடம்பெற உள்ளது.

இதன்போது இந்த விடயம் இறுதி செய்யப்படும் எனவும் தெரியவருகிறது.

சபை முதல்வராக அமைச்சர் விஜித ஹேரத்தையும், ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவாக அமைச்சர் லால் காந்தவையும் நியமிக்க தேசிய மக்கள் சக்தி ஆலோசனைகளை நடத்தியுள்ளது. இதுகுறித்த இறுதி முடிவும் ஆளுங்கட்சி கூட்டத்தில் எடுக்கப்பட உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# புதிய அரசுக்கு ஜம்இய்யத்துல் உலமா வாழ்த்து தெரிவிப்பு

සමස්ත ලංකා ජමිඉයියතුල් උලමා
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
ALL CEYLON JAMIYYATHUL ULAMA
جمعية علماء سريلانكا
(Incorporated by Act of Parliament No.51 of 2000)

நடைபெற்ற முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்ற அரசாங்கத்துக்கு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை வாழ்த்துதெரிவிப்பதில் மகிழ்ச்சியடைவதாக தெரிவித்துள்ளது. இவ்வாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் முஃப்தி எம்.ஐ.எம். ரிஸ்வி மற்றும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பொதுச் செயலாளர் அஷ்-ஷைக் எம். அர்கம் நூராமித் ஆகியோர் இணைந்து வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

கடந்த 2024.11.14ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் வெற்றியைப் பெற்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை தனது வாழ்த்துகளை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்துள்ளது.

சகல வேறுபாடுகளையும் மறந்து நாட்டின் அபிவிருத்தியை மையமாக கொண்டு பலதரப்பட்ட மக்கள் இணைந்து அறுதிப் பொரும்பான்மை வாக்குகளை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆட்சி அதிகாரங்கள் இறைவனால் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள். நாட்டு மக்களுக்கு சேவை செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் என்ற வகையில், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் அவர்களது மத, சமய, கலாசார உரிமைகளைப் பேணி சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்த ஒரு நாட்டை கட்டி எழுப்பும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

அதேபோன்று, மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது மகத்தான சேவைகளை எந்த வேற்றுமைகளுக்கும் அப்பால் நின்று எமது நாட்டின் அபிவிருத்தியை நோக்காக கொண்டு அவர்களது பணிகளை செய்யக்கூடிய திறனையும் தைரியத்தையும் இறைவன் கொடுத்தருள்வானாக என்று பிரார்த்திப்பதோடு எமது நாட்டு மக்கள் அனைவரும் புதிய அரசின் ஆக்கப்பணிகள் அனைத்திற்கும் பூரண ஒத்துழைப்பை கொடுக்க வேண்டும் என்றும் இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறோம் என்று அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.

# மிதிபலகையில் பயணித்த நடத்துனர் உயிரிழப்பு

பாணந்துறை இ.போ.சபைக்குச் சொந்தமான பஸ் நடத்துனர் மிதிபலகையில் இருந்து தூக்கி வீசப்பட்டு உயிரிழந்த கம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த நடத்துனர் மிதி பலகையில் இருந்த மற்றுமொருவரும் தூக்கி வீசப்பட்டு விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

பதுளை பிரதேசத்தை சேர்ந்த 69 வயதுடைய ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

பாணந்துறை டிப்போவுக்கு சொந்தமான பஸ், பாணந்துறையில் இருந்து கண்டி நோக்கி கொஸ்வத்தை பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த போது, பஸ்ஸின் பின் பகுதி மிதி பலகையில் இருந்த நடத்துனர் மற்றும் பயணி தூக்கி வீசப்பட்டு விழுந்துள்ளனர்.

விபத்தில் இருவரும் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நடத்துனர் கிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# தேசியப் பட்டியல் விவகாரம் ; ஐ. ம. சக்திக்குள் குழப்பம்

நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்த ஐந்து தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளையும் ஊழல் அல்லது வேறு எந்தக் குற்றச்சாட்டும் இல்லாதோருக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வித குற்றங்களும் சாட்டப்படாத ஐந்து பேரையே நியமிக்குமாறு கட்சி முக்கியஸ்தர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக கட்சி உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் கட்சியின் தவிசாளர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கர் ஆகியோருக்கு தேசியப் பட்டியலில் இரண்டு இடங்கள் ஒதுக்கப்படும் என தேர்தலுக்கு முன்னர் பேசப்பட்டது.

இவ்விரு இடங்கள் தவிர, டலஸ் அழகப்பெரும, ஜீ. எல். பீரிஸ், சுதர்ஷ னி பெர்னாண்டோ புள்ளே மற்றும் முன்னைய நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேசிய பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

இது தவிர, உபுல் ஜயசூரிய, ரவி ஜயவர்தன, மஹிம மெண்டிஸ் போன்றவர்களுக்கும் தேசியப்பட்டியல் ஆசனங்களை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதே பெரும்பாலானவர்களின் கருத்தாக உள்ளது.

அத்துடன், இம்முறை கொழும்பு மாவட்டத்தில் 5ஆவது இடத்தில் இருந்த எரான் விக்ரமரத்ன, நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டிய குற்றமற்றவர் என்றும் அவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

மேலும் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டுக் கட்சிகளும் சில தேசியப்பட்டியல் இடங்களைக் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி செயற்குழுவின் கலந்துரையாடலின் பின்னர், தேசிய பட்டியல் பதவிகளுக்கு யாரை முன்னிறுத்துவது என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## மக்களின் ஆணைக்கு ஆயிரம் அர்த்தங்கள்

மக்கள் ஆணை பெற்ற அரசாங்கத்தின் கன்னி அமைச்சரவை பதவி ஏற்றிருக்கிறது. புதுத்தெம்போடு புதுப்புது முகங்கள் பதவிப்பிரமாணம் செய்து இருக்கிறார்கள். முதல் கட்டமாக பிரதமர் உட்பட 21 பேர் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த புதிய அமைச்சரவையில், இரண்டு தமிழர்கள் இடம் பெற்றாலும், முஸ்லிம்கள் எவரும் நியமனம் பெறவில்லை. இது ஓர் அதிர்ச்சியாக இருந்தாலும், தாமதித்தாவது, நிவர்த்திக்கப்படும் என்பது எதிர்பார்ப்பு.

அமைச்சரவை மட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். மக்கள் மத்தியிலே வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றாக இதனை நாம் பார்க்க முடிகிறது.

கடந்த காலங்களில் எல்லாம், நூற்றுக்கும் மேற்பட்ட அமைச்சரவை அந்தஸ்து உள்ள அமைச்சர்களை வைத்துக் கொண்டு, மக்களின் வரிப்பணத்தில், சவாரி செய்தார்கள்.

இலங்கை ஒரு காலத்தில் இவ்வாறு உலக சாதனை படைத்திருந்தது. அது கின்னஸ் புத்தகத்திலும் பதிவாகி இருக்கிறது. உலகில் மிகப் பெரிய அமைச்சரவை கொண்ட ஒரு நாடாக இலங்கை இருந்திருக்கிறது.

2010 ஆம் ஆண்டில் இந்த நாட்டில், 10 சிரேஷ்ட அமைச்சர்கள், 54 அமைச்சர்கள், 02 திட்ட அமைச்சர்கள், 39 பிரதி அமைச்சர்கள் கொண்ட மிகப்பெரிய அரசாங்கம் ஒன்று பதவியில் இருந்தது. இதனை, JUMBO CABINET உள்ள ஒரே நாடு என்று உலகம் அழைத்தது. சாதனை பட்டியலிலும் இலங்கை இணைக்கப்பட்டது.

உலகில் மிகப்பெரிய நாடாக கருதப்படுகின்ற வல்லரசுகளில் கூட இத்தகைய அமைச்சரவை இருந்ததில்லை. கூட்டுக் கட்சிகளுக்கு கொழுக்கு போட்டு, இருப்பை தக்க வைப்பதற்காக, சகல சிறப்புரிமைகளோடும் இந்த அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது.

ஆனால், புதிய மாற்றமும் புதிய ஜனாதிபதி பதவியேற்பும் உலகிற்கு இன்னும் ஒரு சாதனை செய்தியையும் கொடுத்தது. உலகில் மிகக் குறுகிய அமைச்சரவையோடு இயங்குகின்ற நாடு என்ற பெருமைமிகு சாதனையையும் கின்னஸ் புத்தகத்தில் பதிவிட்டு இருக்கிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பதவியேற்றதும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. இந்த நிலையில் இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்ட நிலையில், மூன்று அமைச்சர்களே ஒரு மாத காலத்துக்கு மேலாக நாட்டை நெறிமுறை தவறாமல் வழி நடத்தினார்கள் என்பது பாராட்டுக்குரியது.

அமைச்சரவை என்பது நாட்டை நெறிமுறைப்படுத்தும், நம்பகரமான அரச நிறுவனம் ஆகும். ஒரு நாட்டின் அரசியலமைப்பு விதிமுறைகளுக்கு அமைய உருவாக்கப்படும் அமைச்சரவை குழு, அரசாங்கத்தை சரியான முறையில் வழிநடத்திச் செல்வதற்கு உறுதுணையாக இருந்து செயல்படும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த கன்னி அமைச்சரவைக்கு பாரிய சுமை இருக்கின்றது. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக்கூடிய வல்லமையுள்ளதாக இந்த அமைச்சரவை இருக்க வேண்டும்.

மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதில் இந்த அரசாங்கம் சாக்குப் போக்குகளை சொல்லி நழுவி விட முடியாது. மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான வாக்குகளை மக்கள் வழங்கி, இருக்கிறார்கள். இந்த செய்தியை அரசாங்கம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

மக்கள் நலம் சார்ந்த நூற்றுக்கணக்கான பிரச்சினைகள் சமூகத்தில் தேங்கி கிடக்கின்றன. அரசாங்க மட்டத்தில் தீர்வு காணக்கூடிய எத்தனையோ பிரச்சினைகள் இன்னும் முடிவின்றி தொடரத்தான் செய்கின்றன. கடந்த கால ஆட்சியாளர்கள் பிரச்சினைகளை அரசியலாக்கி தட்டிக் கழித்ததும், வரிப்பணத்தை சுருட்டுவதிலுமே குறிக்கோளுடன் செயல்பட்டார்கள்.

இலவச சுகாதாரம், இலவச கல்வி, இலவச சீருடை விநியோகம்... இவ்வாறு எல்லாமே இலவசம் என்ற நிலை இருந்தாலும், சுரண்டல் பேர்வழிகள் அதிலும் சுரண்டிக் கொண்டுதான் இருந்தார்கள்.

சுகாதார அமைச்சில் நடந்த ஊழல் எத்தனையோ உயிர்களை காவு கொண்டன. பலர் அங்கவீனமாகி இருக்கிறார்கள், இன்னும் சிலர் பார்வை இழந்து பரிதவிக்கிறார்கள்.. இதற்கெல்லாம் இன்னும் பதில் கிடைக்கவில்லை.

செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் தரக்குறைவானவை என்று ஊர்ஜிதம் ஆகிய நிலையில், சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரிகளும் அமைச்சரும் கைது செய்யப்பட்டார்கள். இவர்கள், தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், இதனை தீர்வாகக் கொள்ள முடியாது. தரக்குறைவான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு உறுதுணையாக இருந்த வலைப்பின்னல் கண்டறியப்பட்டு, அவை வேரோடு களையப்பட வேண்டும்.

அதேபோல், நூற்றுக்கணக்கான உயிர்களை காவு கொண்ட, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. விசாரணைக்கு மேல்விசாரணையும், ஆணை குழுக்களுக்கு மேல் ஆணை குழுக்களும் நியமிக்கப்படுகின்றதே ஒழிய இதுவும் முழுமை பெற்றதாக தெரியவில்லை. இப்படியான பிரச்சினைகளுக்கு எல்லாம் உறுதியான அமைச்சரவை தான் தீர்வு காண வேண்டும்.

இந்த நாட்டில் இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டே ஆக வேண்டும். விடுதலை வேண்டி போராடுகின்ற ஓர் இனத்தின் குரல் நசுக்கப்படுவது ஆரோக்கியமானதல்ல. பேரினவாத சிந்தனையோடு இந்தப் பிரச்சினையை கையாண்டதினால் தான், இன்னும், குமுறிக்கொண்டு நிற்கிறது. 30 வருட யுத்தத்தில் நசுங்கிப் போய் கிடக்கின்ற இந்த மக்களும், மாற்றம் வேண்டி, தேசிய மக்கள் சக்திக்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். இந்த செய்தியையும் புதிய அமைச்சரவை புரிந்து கொள்ள வேண்டும்.

அரசியலமைப்பை மாற்றித்தான் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றால், அதனை உடனடியாக செய்யுங்கள். ஏனென்றால், மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பலம் உங்களிடம் தான் இருக்கிறது.

# கல்விமான்களால் நிரம்பும் 10 வது நாடாளுமன்றம்

தேசிய மக்கள் சக்தியிலிருந்து நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள அமைச்சர்களுள் 15 வைத்தியர்கள், 16 சட்டத்தரணிகள் மற்றும் மூன்று பொறியியலாளர்கள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட சுமார் 50 இற்கும் அதிகமான கல்வியாளர்கள் உள்ளடங்குகின்றனர்.

அதன்படி, அதிகளவிலான தொழில் தகுதியுடைய கல்வியாளர்கள் நாடாளுமன்றத்திற்கு தெரிவான முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.



இதேவேளை, நான்கு பேராசிரியர்கள் தேசிய மக்கள் சக்தியிலிருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளதாக கட்சி தெரிவிக்கின்றது.

ஹினிதும சுனில் செனெவி, சேன நாணயக்கார, சந்தன அபேரத்ன மற்றும் எல். எம் அபேவிக்கிரம அந்த பேராசிரியர்கள் ஆவர்.

இராணுவத்தில் ஓய்வு பெற்ற அதிகாரிகள், அரச நிறுவனங்களில் முன்னாள் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பல தொழில் வல்லுநர்கள் தேசிய மக்கள் சக்தியிலிருந்து நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.



கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற 10ஆவது நாடாளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான தேர்தலில் எதிர்ப்பாராத பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில், தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தவிர்ந்த ஏனைய முன்னாள் அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவரும் தோல்வியடைந்தனர்.

கடந்த அமைச்சரவையில் காணப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 22 ஆகும்.

கஞ்சன விஜேசேகர, சுசில் பிரேமஜயந்த, ஹரீன் பெர்ணான்டோ, மஹிந்த அமரவீர, டக்ளஸ் தேவானந்தா, மனூஷ நாணயக்கார, ரமேஷ் பதிரண, விதுர விக்கரமநாயக்க, நளீன் பெர்ணான்டோ, நிமல் சிறிபால த சில்வா, பவித்ரா வன்னியாராச்சி ஆகிய முன்னாள் அமைச்சரவை அமைச்சர்கள் இவ்வாறு தோல்வியைத் தழுவியவர்களுள் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் அதிகளவு பெண்கள் பிரதிநிதித்துவம் இம்முறை பதிவாகியுள்ளது.

தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவாகும் 196 மக்கள் பிரதிநிதிகளுள் 21 பெண் பிரதிநிதிகள் உள்ளடங்குகின்றனர்.

அவர்களுள் 9 சட்டத்தரணிகளும் உள்ளடங்குகின்றனர். குறித்த பெண் பிரதிநிதிகள் அனைவரும் ஒவ்வொரு துறையில் தங்களது பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

இதற்கு முன்னர் இலங்கை நாடாளுமன்றத்திற்கு ஒரே தடவையில் தெரிவான பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை 13 ஆகும். ஒருபோதும் நாடாளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவம் 6 வீதத்தை தாண்டியதாக இருக்கவில்லை.

இம்முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள 21 பெண்களுள் 19 பேர் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டவர்கள் ஆவர்.

இவ்வாறு தெரிவான பெண் பிரதிநிதிகளுள் பெரும்பாலானோர் அரசியல் பின்புலமற்ற ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டவர்கள்.

1931ஆம் ஆண்டில் அப்போதைய சட்டமியற்றும் சபையாக இருந்த அரசாங்க சபைக்கு அடெலின் மொலமுரே தெரிவாகியிருந்தார்.

இலங்கை நாடாளுமன்றத்துக்குத் தெரிவான முதல் பெண் என்ற பெருமையும் அவரையே சேரும்.

இலங்கை ஜனநாயக குடியரசில் 1989ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 6 வீதத்தைவிடவும் குறைவாகவே இருந்தது.

இலங்கை வரலாற்றில் நாடாளுமன்றத்திற்கு அதிகளவான பெண்கள் தெரிவு செய்யப்பட்ட ஆண்டுகளாக 1989, 2004 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளைக் சுட்டிக்காட்ட முடியும்.

குறித்த வருடங்களில் தலா 13 பெண் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தனர்.

மேலும்,2020ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக 9 ஆவது நாடாளுமன்றத்துக்கு 12 பெண் பிரதிநிதிகள் தெரிவாகியிருந்தனர்.

ஆனால் இம்முறை இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 21 பெண் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளமை மிகவும் சிறப்புக்குரியது.

> “தொழில் தகுதியுடைய கல்வியாளர்கள் நாடாளுமன்றத்திற்கு தெரிவான முதல் சந்தர்ப்பம்”

கொழும்பு மாவட்டத்திலிருந்து தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட ஹரிணி அமரசூரிய, கௌசல்யா ஆரியரத்ன, சமன்மலி குணசேகர ஆகியோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் பிரதமர் வேட்பாளர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, 655,289 விருப்பு வாக்குகளைப் பெற்று கொழும்பு மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்திலிருந்து தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட ஹேமாலி குணசேகர களுத்துறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட நிலந்தி கொட்டஹச்சி, ஓஷனி உமங்கா ஆகியோரும் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை, மலையகத்திலிருந்து இம்முறை 03 தமிழ் பெண் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்கும் தேர்வாகியுள்ளமை மிகவும் விசேட அம்சமாகும்.

கண்டி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட துஷாரி ஜயசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட சமிந்திராணி கிரியெல்லவும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

மாத்தளை மாவட்டத்திலிருந்து, தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட தீப்தி வாசலகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட ரோஹினி குமாரி கவிரத்னவும் தெரிவாகியுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அனுஷ்கா தர்ஷனி திலகரத்ன மற்றும் கிருஷ்ணன் கலைச்செல்வி ஆகியோரும் நாடாளு மன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தி சார்பில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட அம்பிகா சாமுவேலும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி காலி மாவட்டத்தில் போட்டியிட்ட ஹசாரா லியனகேவும், மாத்தறை மாவட்டத்திலிருந்து சரோஜா சாவித்திரி போல்ராஜ் ஆகிய இருவரும் தெரிவாகியுள்ளனர்.

அத்துடன், இரத்தினபுரி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட நிலுஷா லக்மாலியும், சாகரிக்கா கங்காணி கேகாலை மாவட்டத்திலும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டு திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து முது ரத்வத்தே, குருணாகல் மாவட்டத்தில் கீதா ஹேரத், புத்தளம் மாவட்டத்தில் ஹிருனி மதுஷா விஜேசிங்க மற்றும் மொணராகலை மாவட்டத்திலிருந்து சதுரி கங்காணி ஆகியோரும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

எவ்வாறாயினும், இம்முறை தெரிவாகியுள்ள நாடாளுமன்றம் கல்விமான்களால் நிரம்பியுள்ளமை சிறந்ததோர் அம்சமாகவே கருதப்படுகின்றது.



கனூஷியா புஷ்பகுமார்



# கென்யா ஹெல்த் ஏஜன்ஸியின் தலைவர் பேருவளை விஜயம்



( பீ.எம் முக்தார்)

கொழும்பில் நடைபெற்ற உலகளாவிய டிஜிட்டல் சுகாதார மாநாட்டில் பங்குபற்ற இலங்கைக்கு விஜயம் செய்த கென்யா நாட்டின் சுகாதார அமைச்சின் டிஜிட்டல் ஹெல்த் ஏஜென்ஸியின் தலைவர் சைலத் சிமாத்வோ ( Silas Simatwo Chairman of Digital Health Agency of Kenya) பேருவளைக்கு வருகை தந்தார்.

பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடம் உட்பட வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பகுதிகளுக்கும் இவர் விஜயம் செய்தார்.

பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தை சுற்றிப் பார்வையிட்ட அவர், இலங்கை முஸ்லிம்களுக்காக உயர்கல்வி பெறுவதற்கு மர்ஹூம் நளீம் ஹாஜியாரினால் அமைக்கப்பட்டதை பாராட்டினார்.இவருடன் சமூக சேவையாளர் இஸ்மத் ராஸிக் மற்றும் மின்னாத் அலி இஸ்பஹான் ஷாபி ஆகியோரும் சென்றனர்.

# முன்னாள் அமைச்சர்களை ஐ.தே.கவில் இணையுமாறு ரணில் அழைப்பு



பொதுஜன பெரமுனை அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த காஞ்சன விஜேசேகர, பிரமித தென்னகோன், அநுராத ஜயரத்ன மற்றும் முன்னாள் அமைச்சர்களை ஐக்கிய தேசியக் கட்சியில் இணையுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சியை மீளக் கட்டியெழுப்புவதற்கு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவையும் இணையுமாறு ரணில் விக்கிரம சிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருந்தபோது அவருக்கு நெருக்கமான பல முன்னாள் இளம் அமைச்சர்கள் கடந்த சனிக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரைச் சந்தித்து எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உடனடி மறுசீரமைப்பு தொடர்பில் இந்த கலந்துரையாடலில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மஹிந்தவின் கனவு புதிய அரசினால் நனவானது

இடதுசாரிகளின் கொள்கையில் வடக்கு மக்களை கவரவேண்டுமென்ற எனது தந்தை மஹிந்த ராஜபக்ஷ வின் கனவு புதிய அரசினால் நனவானதாக பொதுஜன பெரமுனை தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தெற்கில் உள்ள அரசியல் கட்சிகள்இ வடக்கு மக்களை கவரக்கூடிய சூழலை உருவாக்குவது மஹிந்த ராஜபக்ஷவின் கனவாக இருந்தது.

தற்போதைய அரசாங்கத்தின் வெற்றியின் மூலம் அந்த கனவு நனவாகியுள்ளதாக நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும்இ நாட்டை மீண்டும் பிரிவினைவாதத்திற்கு இட்டுச் செல்லும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இடமளிக்காது என நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# மூன்று விமானங்களில் தொழில்நுட்ப கோளாறு

## விமான சேவைகள் ரத்து




கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த மூன்று விமானங்களில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

மூன்று விமானங்களில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதால், பல விமானங்களின் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனையவை தாமதமானதாகவும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

ஒவ்வொரு விமானமும் அதன் விமான பயணத்தை முடித்த பிறகு தொழில்நுட்ப மதிப்பீட்டு சோதனைக்கு உட்படுத்தப்படும். குறிப்பிட்ட சில விமானங்களில் மேற்கொள்ளப்படும் தொழில்நுட்ப பராமரிப்பு பணிகளுக்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுவதாகவும், அதற்கமைவாக இந்த 3 விமானங்களும் தொழில்நுட்ப பராமரிப்பு பணிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

குறித்த விமானங்களில் பயணிக்கும் பயணிகளுக்கு அறிவிக்க ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், இந்த விமானங்களின் ஊடாக குறித்த இடங்களுக்கு கொண்டு செல்ல விரும்பும் பயணிகளை மாற்று விமானங்கள் மூலம் அனுப்பவும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

# சீனன்கோட்டை கங்கானங்கொடையில் மனாகிப் மஜ்லிஸ்



(பேருவளை பீ.எம் முக்தார்)

ஷாதுலிய்யா தரீக்காவின் ஆத்மீக ஞானிகளில் ஒருவரான சங்கைக்குரிய அஷ்ஷெய்ஹ். பாஸி நாயகம் (ரஹ்) அவர்களின் ஜனன தினத்தை முன்னிட்டு பேருவளை சீனன்கோட்டை கங்கானங்கொடையில் முத்தாஸ், மும்தாஸ் தலைமையில் மனாகிப் மஜ்லிஸ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கலீபதுஷ்ஷாதுலி மௌலவி, முஹம்மத் பாரூக் (மக்கி) தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சீனன்கோட்டை குர்ஆன் மதாரில் பணிப்பாளர் மௌலவி எம்.டப்ளியு. எம் பஹ்ருத்தீன் (மிஸ்பாஹி) உட்பட உலமாக்கள்,முகத்தமீன்கள், முன்சிதீன்கள், இஹ்வான்கள் கலந்து கொண்டனர்.

மனாகிப் மஜ்லிஸை அடுத்து, திக்ர் (ஹழரா) வைபவமும், துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றன.

ஆத்மீக ஞானி பாஸி நாயகம் (ரஹ்) அவர்களின் உயரிய வாழ்க்கை வரலாறு பற்றி கலீபா மௌலவி பாரூக் (மக்கி) எடுத்துக் கூறினார்.

# பைசர் முஸ்தபாவுக்கு தேசிய பட்டியலில் இடம் கொடுக்குமாறு கோரிக்கை



பொதுத் தேர்தலில் ,புதிய ஜனநாயக முன்னணிக்கு அணியினருக்கு கிடைத்த இரண்டு தேசியப்பட்டியல் பதவிகளில் ஒன்றை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பைசர் முஸ்தபாவுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்த அணியினர் எழுத்துமூலம் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் தேசிய பட்டியலில் இணக்கம் காணப்பட்டதன் பிரகாரம் தமது கட்சிக்கு தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி ஒன்று வழங்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரிந்த அணியினர் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க (பிரிந்த அணி) ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் நாடாளுமன்றத் தேர்தல்– 2024 தேசியப் பட்டியல் உறுப்பினர் நியமனம் தொடர்பாக கடந்த பொதுத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து போட்டியிட்டதை நினைவுபடுத்தியுள்ளார்.

# யானை தாக்கி முதியவர் உயிரிழப்பு



காட்டு யானை தாக்கி முதியவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.குறித்த சம்பவம் பொலன்னறுவை, அரலகங்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எல்லேவெவ பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (17) மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் பொலன்னறுவை எல்லேவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய முதியவர் உயிரிழந்துள்ளார்.

முதியவர் காட்டு யானை தாக்கி காயமடைந்த நிலையில் அரலகங்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# இலங்கையில் ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படையின் கப்பல்




ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படையின் கப்பல் ‘JMSDF SAMIDARE’ உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் (17) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

வருகை தந்த கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கமைய வரவேற்றதாக இலங்கை கடற்படை ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்த கப்பல் 151 மீற்றர் நீளம் கொண்ட, இந்த கப்பல் 199 பணியாளர்களைக் கொண்ட கடற்படை குழுவினால் இயக்கப்படுகிறது.விஜயத்தை முடித்துக்கொண்டு இன்று (19) இலங்கையை விட்டு வெளியேற முன் கப்பலின் பணியாளர்கள் சில உள்ளூர் சுற்றுலாத் தலங்களுக்குச் சென்ற பின்னர் மீண்டும் பயணத்தை தொடர்வார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.








# ‘அனுமார்’ பாலம் இலங்கை– இந்திய உறவுக்கு அனுகூலம்..!

## உறவு பாலத்துக்கு வித்திட்டவர் மகாகவி பாரதி..!



“வதிவிட விசாவில் இலங்கை வந்த தமிழ் வர்த்தகர்கள் இந்நாட்டின் செல்வத்தை சுரண்டுவதாகவும் நாட்டின் எதிர்கால முதலாளிகள் எனவும் ஒரு காலத்தில் விமர்சிக்கப்பட்டனர். உண்மையாகவே நாட்டைச் சுரண்டி வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்தது சிங்கள அரசியல்வதிகளும் உயர் அதிகாரிகளும்தான்“

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பாலம் அமைப்பது தொடர்பான யோசனை சுப்பிரமணிய பாரதி காலத்தில் இருந்தே ஆரம்பமாகிவிட்டது. 1882ஆம் ஆண்டு எட்டயபுரத்தில் சுப்பிரமணியம் என்ற பெயருடன் பிறந்து வளர்ந்த அவர் புதிய தமிழ்ச் சிந்தனையின் நிகரற்ற புலவரானார். ஏராளமான பாடல்களை இயற்றிய அவரது பாடல்களில் இன்றைக்கும் பேசப்படும் பாடலாக விளங்குவது பாரததேசம் என்ற “வெள்ளிப்பணிமலையின் மீதுலாவுபோம்...“ என்ற பாடலாகும்.

இன்றைய வங்க தேசத்தையும், பாகிஸ்தானையும் உள்ளடக்கிய அகண்ட பாரதத்தை மனதில் இருத்தி பாடிய பாடல் அது. வங்கத்தில் ஓடும் நதி நீரை மைய இந்தியாவுக்கு திசை திருப்புவோம என்று பாடும் அவர், இன்று பாகிஸ்தானில் உள்ள சிந்து நதியில் கேரளப் பெண்களுடன் தோணிகளில் பயணம் செய்து தெலுங்கிலே பாடல் இசைப்போம் என்கிறார். கங்கை சமவெளியில் விளையும் கோதுமையை காவிரி சமவெளியில் விளையும் வெற்றிலை கொடுத்து பண்டமாற்று செய்வோம் என்றும் மராட்டியரின் கவிதைகளை மெச்சி கேளர தந்தங்களை பரிசுகளாக அளிப்போம் என்கிறார்.

இது ஒரு நாடு, அனைவரும இந்தியர்கள், ஒவ்வொரு சமூகமும் மற்ற சமூகத்துடன் நெருங்கிய உறவுகள் பேணி தமக்கிடையே வர்த்தகமும் செய்து கொள்ள வேண்டும் என்ற அவரது விசாலித்த சிந்தனையில் உருவான பாடல் இது. இப்பாடலில் வரும் வரிகளில் ஒன்றுதான் சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்பதாகும். சேது பாலத்தை மேடாக்கி அதன் மீது வீதி அமைக்கலாம் – தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னார் வரை என்று ஒரு யோசனையையும் அவர் முன் வைக்கிறார். இந்தியாவின் அனைத்து பிரதான சமூகங்கள் மட்டுமின்றி சின்னஞ்சிறிய பக்கத்து நாடான சிங்களத் தீவுக்கும் பாலம் அமைத்து அந்நாட்டுடனும் நல் உறவுகளை பேணுவோம் என்ற எண்ணத்துடன் இந்த வரிகளை அவர் அமைத்திருக்க வேண்டும்.

பாரதி என்ற கவிஞர் இவ்வாறு ஒரு கவிதையைப் பாடியிருக்கிறார் என்பதை சிங்கள தேசியவாதிகள் தெரிந்து கொண்டபோது, நம் நாட்டை கபளீகரம் செய்யும் நோக்கத்துடன் அப்போதே ஒரு திட்டம் இந்தத் தமிழர்களுக்கு இருந்திருக்கிறது. இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் ஒரு பகுதியாகவே இப்பாடல்வரிகளை கொள்ள வேண்டும் என அவர்கள் கருதவும் தொடங்கினர். ஆனால் பாரதிக்கு விஸ்தரிப்புவாத அரசியல் பற்றித் தெரிந்திருக்க வாய்ப்பிருக்கவில்லை. இந்தியா மட்டுமல்ல, அதனுடன் அண்டை நாடுகளும் வாழ்க என்பதே அகண்ட சிந்தனை கொண்ட பாரதியின் கனவாக இருந்திருக்க வேண்டும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் அல்லது தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே ஒரு பாலம், வாகனங்களுக்கானது, அமைக்கப்பட வேண்டும் என்பது பாரதி போட்ட விதையானாலும், பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் இருந்து அகல்வது ஒரு இருபது ஆண்டுகள் தாமதமாகி இருந்திருக்குமானால் இரு நாடுகளும் பாலம் ஒன்றின் மூலம் இணைக்கப்படும் சாத்தியம் இருந்திருக்கும். ஏனெனில் இரு நாடுகளும் பாலம் ஒன்றால் இணைக்கப்படுவது, இரு நாடுகளுக்குமே அனுகூலமாகவே இருந்திருக்கும்.

இரு நாடுகளுக்கு இடையில் பாலம் அமைக்கப்பட வேண்டும் என்பது 2015ஆம் ஆண்டு பா.ஜ.க. அரசில் வீதி, பெருந்தெருக்கள், போக்குவரத்து அமைச்சராக இருந்த நிதின் கட்கரியின் யோசனை. அவர் இந்த யோசனையை முன்வைத்ததோடு ஆசிய அபிவிருத்தி வங்கியில் கடன் கேட்டு மனு செய்தார். இத்திட்டத்துக்கு கடன வழங்க அவ் வங்கியும் இணங்கியது. ஆனால் இந்த யோசனை இலங்கை அரசுக்கு வந்தபோது அன்றைய அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல அதை நிராகரித்தார். இத்திட்டத்தின் சாதக, பாதக தன்மைகளை சீர்தூக்கிப் பார்த்து, எதிர்கால பொருளாதார நன்மைகளையும், பிராந்தியத்தின் அரசியல் பொருளாதார சூழல்கள் மற்றும் சவால்களையும் கருத்தில் கொண்டே இத்தீர்மானத்தை கிரியெல்ல எடுத்திருப்பார் என்று தோன்றவில்லை. இந்தியாவுக்கு பாலமா? ஐயோ! சிங்கள நலன்கள் என்னவாகுமோ? தமிழர்கள் படையெடுத்து வந்து இலங்கையை ஆக்கிரமித்து விடுவார்களே! என்ற சராசரி சிங்கள அரசியல் சிந்தனையில் எடுக்கப்பட்ட முடிவு மாதிரியே இது அமைந்திருந்தது.

2015 இல் இவ்விடயம் மீண்டும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்தியா இந்தத் திட்டத்தை மீளாய்வு செய்து ஆரம்ப சாதக, பாதக அறிக்கையைத் தயார் செய்தது. இதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமான வழிகள், சுற்றுலா வளர்ச்சி, வர்த்தக ரீதியான வளர்ச்சி, புதிய வேலை வாய்ப்புகள் என்பன சீர்தூக்கிப் பார்க்கப்பட்டன.

> **1964 வரை முக்கியமான துறைமுக நகரமாக விளங்கிய தனுஷ்கோடியே இலங்கைக்கான பண்டங்களும் இந்தியத் தொழிலாளர்களும் இலங்கை வந்தடையும் மார்க்கமாகத் திகழ்ந்தது..!**

2023 ஆம் ஆண்டு இலங்கை பொருளியலாளர்கள் இத் திட்டத்தை ஆய்வுட்டுத்தினார்கள். வருடமொன்றில் இலங்கை மக்கள் மிக அதிகமாக பயணம் செய்யும் நாடு இந்தியா என்பதால், பாலம் அமைத்தால் இந்தியாவுக்கான பயணச் செலவு ஐம்பது சதவீதத்தால் குறையும் என்பது அவர்களின் பிரதான மதிப்பீடாகும். மேலும் இந்தியாவில் இருந்து வரக்கூடிய பண்டங்கள், மற்றும் சேவைகளின் விலைகளும் குறையும். அதிக சுற்றுலா பயணிகள் வருகையால் டொலர் வருமானம் அதிகமாகும், இலங்கை உற்பத்திகளுக்கு இந்திய சந்தை வாய்ப்புகள் கிட்டும், முடிவுப் பொருட்களை எடுத்துச் செல்லும் செலவு குறையும் என பொருளியலாளர்கள் குறிப்பிட்டிருந்தனர்.



அருள் சத்தியநாதன்

இதே ஆண்டு ஜனாதிபதியாக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க புதுடில்லி சென்றிருந்தபோது பாலம் அமைப்பது தொடர்பாக அரச மட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அதிகாரிகள் மட்டத்தில் இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதற்கு தீர்மாமனிக்கப்பட்டதோடு உயர் அதிகாரிகள் புதுடில்லி சென்று ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்னாயக்க தலைமையில் பேச்சுவார்த்தை கள் நடத்தப்பட்டன. இப்பேச்சுவார்தை களில், பாலம் அமைப்பதற்கு இரு தரப்புமே பச்சைக் கொடி காட்டியிருந்தது.

ராமேஸ்வரத்தின் இறுதி முனையிலேயே தனுஷ்கோடி அமைந்துள்ளது. 1964 வரை முக்கியமான துறைமுக நகரமாக விளங்கிய தனுஷ்கோடியே இலங்கைக்கான பண்டங்களும் இந்தியத் தொழிலாளர்களும் இலங்கை வந்தடையும் மார்க்கமாகத் திகழ்ந்தது. இந் நகரம் 1964 கொடும் புயலில் சின்னா பின்னமானது. இன்றைக்கும் இது யாரும் வசிக்காத பேய் நகரம். பகலில் ஏராளமானோரைக் கவரும் சுற்றுலாத்தலம். இங்கிருந்து தலைமன்னார் கிட்டிய தூரத்தில், 27 கி.மி தொலைவில் அமைந்திருப்பதால் பாலம் அமைப்பது தனுஷ்கோடியில் இருந்தே ஆரம்பமாகும்.

புதிய ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் புதுடில்லியில் பாலம அமைத்தல் தொடர்பான ஒரு பேச்சுவார்த்தை இடம்பெற்றது. அதில் கலந்து கொள்ள ஜனாதிபதி ஒரு குழுவை அனுப்பி வைத்திருந்தார். எனவே அமையவிருக்கும் புதிய அரசு கண்மூடித்தனமாக பாலம் அமைத்தலை எதிர்க்காது என்றே தோன்றுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளாக பாலம் அமைத்தல் தொடர்பான கதையாடல்கள் ஊடகங்களில் நிகழ்ந்து வந்துள்ள போதிலும் காரசாரமான எதிர்ப்புக்குரல்கள் எழுந்ததாகத் தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தற்காலிக வதிவிட விசாவை வைத்திருந்த இந்திய வர்த்தகர்களை விரட்டி அடிக்க வேண்டும் என்ற வெறித்தனமான கோஷங்கள் 60, 70 களில் எழுந்தன. அக்காலத்தில் “ஒன்ன பலபங் பெனலா யனவா கள்ளத்தோனிலா... அபே அனாகதே முதலாயியா...“ என்ற ஒரு பைலா பாடல் வெகு பிரசித்தம். பின்னர் இலங்கை வானொலியில் அதைத் தடை செய்திருந்தார்கள். எழுபதில் பதவிக்கு வந்ததும் டி.ஆர்.பி காரர்கள் என அழைக்கப்பட்டு வந்த இந்த தற்காலிக வதிவிட அனுமதி பெற்றவர்களை கூண்டோடு தமிழகத்துக்கு அனுப்பி வைத்தார் ஸ்ரீமாவா பண்டாரநாயக்க.

அவ்வாறிருந்த இந்தியர் எதிர்ப்பு மனப்பான்மை தலைமுறை மாற்றங்களோடு படிப்படியாக மங்கி பாலம் அமைத்தால் தான் என்ன என்று கருதும் அளவுக்கு வந்திருக்கிறது. பாலம் அமைப்பதால் இந்திய விரிபுவாதம், இந்திய தேசிய வாதம், தமிழ் தேசியம் எனப்படும் கொடுங் கொடுக்குகளால் இந்தியா இலங்கையைக் கபளீகரம் செய்துவிடும் என்ற முடிவுக்கு வருவது நடைமுறை உண்மைகளுக்கு அப்பால் இந்திய வெறுப்புவாதத்தால் உருவாக்கப்பட்டதாகவே இளம் தலைமுறை கருதும் நிலை தோன்றியுள்ளது.

உலக நாடுகள் எங்கும் நாடுகளுக்கு இடையிலான பாலங்கள் உள்ளன. பல்கேரியாவையும், ரூமேனியாவையும் இணைக்கிறது ஒரு நட்புறவு பாலம். மலேசியாவையும் சிங்கப்பூரையும் ஒரு தாம்போதி இணைக்கிறது. பிரான்சையும் ஜெர்மனியையும் ஒரு பாலம் இணைக்கிறது. அப்பாலத்தின் வழியே சென்றால் சுவிஸ் எல்லை அருகாமையில் வரும். சுவீடனுக்கும் டென்மார்க்குக்கும் இடையே ஒரு பாலம் உள்ளது. இங்கிலாந்தையும் வேல்சையும் வேள்ஸ் இளவரசர் பாலம் இணைக்கிறது. சவூதியையும் எகிப்தையும் ஒரு பாலம் இணைக்கிறது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். வெள்ளைக்காரர்களுக்கு பிரெஞ்சுக்காரர்களை அவ்வளவாக பிடிக்காது. அப்படியேதான் பிரெஞ்சு பிரஜைகளுக்கும். ஆனால் என்ன, ஆங்கிலக் கால்வாய்க்கு கீழே தோண்டப்பட்டுள்ள சுரங்கத்தின் வழியாக கார்களும், ரயிலும் சுதந்திரமாக சென்று வருகின்றன.

இரு சமூகங்களும் வெள;வேறு கலாசார பாரம்பரியங்களைக் கொண்டவை. இச் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டதால் எந்தக் கலாசார அல்லது அரசியல் சீரழிவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இந்த சுரங்க இணைப்பு எமக்கு வேண்டாம் எனச் சொல்லவுமில்லை. சிங்கப்பூரையும் மலேசியாவையும் இணைக்கும் தாம்போதி 1.056 கி.மீ. நீளமானது. 1923ஆம் ஆண்டிலேயே அமைக்கப்பட்டு விட்டது. இத் தாம்போதி வழியாகவே சிங்கப்பூருக்கு குடிநீர் குழாய்வழியாக போகிறது. நூறு ஆண்டுகள் கழிந்த பின்னரும் மலேசியாக குட்டி சிங்கப்பூரை விழுங்கியதாகத் தெரியவில்லை. நாடுகளிடையே பாலங்கள் அமைக்கப்படுவது சாதாரண விஷயம் என்பதை இதன்மூலம் புரிந்து கொள்ளலாம். இப்பாலங்கள் வழியாக ஒரு நாடு இன்னொரு நாட்டை இராணுவ, கலாசார அல்லது மத ரீதியாக ஆக்கிரமித்ததாக எந்தத் தகவலும் இல்லை.

மேலும், இலங்கையில் கடைபிடிக்கப்படும் மதங்கள், கலாசாரங்கள், மொழிகள், பழக்க வழக்கங்கள், கலைகள் என அனைத்தினதும் ஆனிவேர் இந்தியாவிலேயே அமைந்துள்ளது என்பது தெரிந்த விஷயம். சிங்கள மொழி இந்திய மொழிகளின் கலப்பினால் உருவானது என்பதும் பௌத்தம் இந்தியாவைத் தாயகமாகக் கொண்டது என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று. எனவே, இந்தியாவிடமிருந்து இலங்கை புதிதாகக் கற்றுக் கொள்ளவோ அரவணைத்துக் கொள்ளவோ எதுவுமில்லை என்பது ஒருபுறமிருக்க, தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை பாலத்தினூடாகத்தான் இலங்கைக்கு வந்தாக வேண்டிய அவசியம் கிடையாது.

என கடந்த 75 ஆண்டுகளாக சொல்லப்பட்டு வந்தபோதிலும் இந் நாட்டை சுரண்டிக் கொழுத்ததோடு நாட்டை வங்குரோத்தாக்கியது வெள்ளைக்காரர்களா, இந்தியர்களா என்றால் இல்லை, சிங்கள அரசியல்வாதிகளும் உயர் பொறுப்பு வாய்ந்த சிங்கள அதிகாரிகளும் தான் என்பதே சரியான பதிலாக இருக்கும்.

இணைய மற்றும் ஸ்மார்ட் போன்களால் எவ்வளவோ நன்மைகள் கிட்டுகின்ற போதிலும் அவற்றை தவறாகப் பயன்படுத்தினால் கிடைக்கக்கூடிய கெடுதல்களோ ஏராளம். இப்பாலமும் அப்படித்தான். சுங்கத் திணைக்களமும், குடிவரவு குடியகழ்வு திணைக்களமும் போதிய ஏற்பாடுகளை உருவாக்கி அவற்றை லஞ்சம், ஊழல்களுக்கு அப்பால் நேர்மையுடன் செயல்படுத்தினால் தமிழகத்தின் வழியாக இலங்கை வருவோரை கண்காணிக்கவும் நிர்வகிக்கவும் முடியும் தேவையானால் புதிய சட்டங்களை உருவாக்கவும் முடியும். வட மாகாணத்துக்குத்தான் இப் பாலத்தால் அதிக நன்மைகள் கிட்டும் என்பதாக குறுகிய நோக்கில் சிந்திக்காமல், முழு இலங்கைக்கும் எவ்வளவு நன்மைகள் கிடைக்கும் என்ற ரீதியாக சிந்தித்து செயல்படுத்த வேண்டிய திட்டம் இது.

புதிய தொழில்நுட்பத் திறன் காரணமாக உலகம் சுருங்கி வருகிறது என்பதை நம் அனைவருமே ஏற்றுக் கொள்ளும் போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே அமையவுள்ள பாலம் மட்டும் எப்படி தீமைகளை மட்டும் கொண்டுவரும் என எண்ணமுடியும்?

ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் மக்கள் எதிர்பார்த்திருந்த அதிரடி சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. “சிஸ்டம் சேன்ஞ்“ என்பது நிர்வாக சீர்திருத்தங்களை மட்டும் குறிப்பதாக இருக்க முடியாது. அது மக்களின் மற்றும் சமூக சிந்தனை மாற்றத்தையும் குறிப்பதாக அமையவேண்டும். தமிழர்கள் இந்நாட்டை இந்திய ஆதரவுடன் கபளீகரம் செய்வதற்காகவே காத்திருக்கிறார்கள் என்ற பாரம்பரிய சிங்கள இனவாத சிந்தனைக்கு முடிவு கட்டுவதும் “சிஸ்டம் சேன்ஞ்“சில் முக்கியமானது.

இந்நாட்டின் பொதுவான அபிவிருத்தியை கருத்தில் கொண்டு புதிதாக பதவிக்கு வந்துள்ள இந்த அரசு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அனுமார் பாலத்தை அமைக்கும் திட்டத்தை இந்திய அரசுடன் இணைத்து செயல்படுத்த முன்வரவேண்டும். ஏனெனில் மாற்றுச் சிந்தனையில் இதுவும் அடங்கும். இப்பாலம் காலம் காலமாக நம்பப்பட்டு வந்துள்ள, மூட நம்பிக்கைகளையும் அரசியல் மோசடிகளையும் தகர்க்கும்!

## இராணுவ பயிற்சி முகாமில்

# 500 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் தனிமைப்படுத்தல்

மன்னார்-யாழ் பிரதான வீதி பெரியமடு கொமான்டோ இராணுவ பயிற்சி முகாமில் 500 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

குறித்த பயிற்சி முகாமில் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவ வீரர்கள் சிலருக்கு சுகயீனம் ஏற்பட்டதையடுத்து அவர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது முன்னெடுக்கப்பட்ட மருத்துவ பரிசோதனையில் அவர்களுக்கு மூளைக் காய்ச்சல் ஏற்பட்டமை கண்டறியப்பட்டது.

இதை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அஸாத் எம் ஹனீபா உறுதிப்படுத்தினார்.

குறித்த பயிற்சி முகாமில் பயிற்சி நடவடிக்கைகளை நிறுத்த வைத்திய தரப்பினால் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.இதையடுத்து அங்கு பயிற்சி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு அங்கிருந்த 500 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.



# தேசிய பட்டியல் மூலம் வன்னி மாவட்ட எம்.பியாக உபாலி சமரசிங்க

(கி.வசந்தன்)

தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியில் ஊடாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக உபாலி சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்

தேசிய மக்கள் சக்தி தனது 18 தேசியப் பட்டியல்களுக்கும் உரிய நாடாளுமன்ற உறுப்பினர்களது பெயரை வெளியிட்டுள்ளது.

அதில், வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பாகப் போட்டியிட்டு தோல்வியடைந்த வவுனியா, மடுகந்தையில் வசிக்கும் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளரும், கட்சியின் நீண்டகால உறுப்பினருமான உபாலி சமரசிங்கவின் பெயரும் உள்வாங்கப்பட்டுள்ளது.



# இரணைமடு குளத்தின் பிரதான நீர்ப்பாசன வாய்க்கால் இடிந்து வீழ்ந்தது

(எஸ்.பாஸ்கரன்)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் பிரதான நீர்ப்பாசன வாய்க்காலில் அமைக்கப்பட்ட கொங்கிறீட் சுவர் இடிந்து வீழ்ந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடு குளத்தில் கடந்த 2015 முதல் 2018ம் ஆண்டுவரை இபாட் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டுமான வேலைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என விவசாயிகளால் ஏற்கனவே குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் முரசுமோட்டை, ஊரியான் ஆகிய பகுதிகளுக்கு நீரை கொண்டு செல்லும் பிரதான வாய்க்காலில் 2018ம் ஆண்டு இபாட் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கொங்கிறீட் சுவர்கள் உரிய முறையில் அமைக்கப்படாததால் தற்போது குறித்த கொங்கிறீட் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன.

இதேவேளை பன்னங்கண்டி மற்றும் கோரக்கண்கட்டு,ஊரியான் மேற்கு ஆகிய பகுதிகளுக்கு நீரை கொண்டு செல்லும் பிரதான வாய்க்காலில் தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கொங்கிறீட் சுவர் உரிய முறையில் அமைக்கப்படாததால் சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டு ஏற்பட்டுள்ளது.

பெருந்தொகை நிதிகளை செலவிட்டு மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் இது தொடர்பாக விவசாயிகள் பல தடவைகள் சுட்டிக் காட்டிய போதும் துறைசார் அதிகாரிகள் அசமந்தப் போக்கு காட்டி வருவதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.



# பாதை புனரமைப்பு கைவிடப்பட்டதால் போக்குவரத்தில் பெரும் சிரமம்



கிளிநொச்சி கண்டாவளை பிரதான வீதியின் திருத்த வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதால் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி, பரந்தன் -முல்லைத்தீவு ஏ-35 வீதியின் வெலிக்கண்டல் சந்தியிலிருந்து கண்டாவளை செல்லும் பிரதான வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் விடப்பட்டுள்ளன.

குறித்த வீதியின் திருத்த வேலைகள் இன்று வரை நிறைவுறுத்தப்படாது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதால் மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை நோக்கி வருகின்றனர்.

# ஹாட்லி மைந்தர்களது நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு!





ஹாட்லியின் மைந்தர்களது 25 ஆம் ஆண்டு நினைவு நாள் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அவர்களது குடும்பத்தவர் மற்றும் நண்பர்களால் நேற்றுமுன்தினம் (17) ஞாயிற்றுக்கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கல்வி செயற்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற் பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராட்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்த யாழ்.ஹாட்லி கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களான பூரணமூர்த்தி-சுந்தர்வன், சிவநாதன்-இரவிசங்கர், சுந்தரலிங்கம்-சிவோத்தமன் மற்றும் பாலகிருஸ்ணன்-பிரதீபன் ஆகிய நான்கு பேரின் 25 ஆவது ஆண்டு, மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்றுவந்த வேளை புகையிரத விபத்தில் சிக்கி உயிரிழந்த மரியரட்ணம்-குணரட்ணத்தின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை (17)காலை வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அனுஷ்டிக்கபட்டுள்ளது.

இதன்போது உயிரிழந்த மாணவர்களது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஹாட்லிக் கல்லூரி அதிபர் த.கலைச்செல்வன் உள்ளிட்ட பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

# பல்கலைக்கழக மாணவர் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தின் உடனடி தீர்வு அவசியம்

## பேராதனை மாணவர்கள் அரசிடம் கோரிக்கை

( கண்டி நிருபர்)

பேராதனை பல்கலைக்கழகத்தில் நிலவும் கல்விசார் – கல்விசாரா மற்றும் மாணவர்களது நலன்புரி பிரச்சினைகள் அனைத்தையும் உடனடியாக தீர்க்குமாறு பல்கலைக்கழக நிர்வாகத்திடமும் , அரசாங்கத்திடமும் கோரிக்கை விடுப்பதாக பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அறிவித்தது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் ஊடாக மாநாடு நேற்று நடைபெற்ற போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,





அரசாங்கம் மாணவர்களுக்கு எதிராகவே செயற்படுகிறது. மாணவர்களின் பல கோரிக்கைகளை காலா காலமாக ஆட்சி செய்த சகல அரசாங்கங்களும் உதாசீனம் செய்துள்ளன. பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான எல்லா மாணவர்களுக்கும் விடுதி வசதி வழங்கப்பட வேண்டும். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்கக் கூடிய சூழல் இல்லை. சகல மாணவர்களுக்கும் உணவக வசதிகள் இல்லை. மாணவர்களால் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளது. மாணவர்களுக்கு உதவ முடியாது என்றால் எவ்வாறு கீழ் மட்ட மக்களுக்கு உதவி வழங்க போகின்றீர்கள்.

முகாமைத்துவ பீடத்திற்குக் கட்டிட வசதிகள் இல்லை. இணைந்த சுகாதார பீடத்தில் கற்ற மாணவர்களுக்குக் தொழில் வாய்ப்புகள் இல்லை. தனியார் பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கே தொழில் வழங்கப்படுகிறது. சட்டம் கற்பவர்கள் இறுதியில் சட்டக் கல்லூரி செல்வதற்கு அதிக கட்டணம் அறவிடப்படுகிறது. இதை செலுத்த முடியாத பல மாணவர்கள் உள்ளனர். இலவச கல்வி என்பதை பொய்யாக்கியுள்ளனர் என தெரிவித்தனர்.

# பதுளை - பசறை பிரதான வீதியில் பாரிய மண்சரிவு-போக்குவரத்து பாதிப்பு

(ராமு தனராஜா)

பதுளை - பசறை லுனுகல யு5 வீதியின் பசறை 13 ம் கட்டைப் பகுதியில் மண்மேட்டுடன் பாரிய கற்கள் சரிந்து வீதியில் வீழ்ந்தமையால் குறித்த வீதியினூடனான போக்குவரத்து நேற்று (18)முற்றாகத் தடைப்பட்டது.

நேற்று அதிகாலை சுமார் 3.00 மணியளவில் கற்கள் உருண்டு விழும் பாரிய சத்தம் கேட்டதாகவும் உடனே வீதிக்கு வந்து பார்த்த போது கற்களினாலும் மண்மேட்டினாலும் மரங்களினாலும் வீதி மூடப்பட்டு காணப்பட்டதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

குறித்த மண் சரிவினால் வீதி ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று முச்சக்கர வண்டிகளில் இரண்டு முச்சக்கர வண்டிகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. மேலும் ஒரு முச்சக்கர வண்டி முற்றாக சேதமடைந்துள்ளது. குறித்த அனர்த்தத்தின் போது உயிர்ச் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை.



மேலும் 2019 ம் ஆண்டு டிசம்பர் மாதம் குறித்த வீதி புனரமைக்கப்பட்டுக் கொண்டிருந்த போது அவ்விடத்தில் பாரிய கல் ஒன்று வீதியில் விழுந்தது. குறித்த பகுதியில் கற்களை முழுமையாக அகற்றாமல் அவ்விடத்தில் ஒற்றை வழி போக்குவரத்தாகவே காணப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர்.

பின்னர் 2021 ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ம் திகதி லுனுகலையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்து அவ்விடத்தில் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 40 ற்கு மேற்பட்டோர் காயமடைந்து 14 பேர் உயிரிழந்தனர்.

அதன் பின்னர் 2023 ம் ஆண்டு மார்ச் மாதம் 21 ம் திகதி கார் ஒன்று அவ்விடத்திலேயே விபத்துக்குள்ளானதில் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.





நுவரெலிய கல்வி வலயத்தில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர் ஆலோசகராக கடமையாற்றிய திருமதி.பி. பத்ம ஜோதி அண்மையில் தனது கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். 24 வருடங்கள் ஆசிரியர் ஆலோசகராக சிறப்பாக பணியாற்றிய இவர் ஆரம்பக் கல்வியில் புலமைப் பரீட்சை இணைப்பாட விதான செயல்பாடுகள், தமிழ்த் தினப் போட்டிகள் என பல வழிகளில் மாணவர்களை வெற்றியடைய வழிகாட்டியவராவார். அண்மையில் அவரின் பிரியாவிடை வைபவம் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற போது...

(படம் : கொட்டகலை நிருபர்)

# கல்முனை மண்ணுக்கு துரோகம் செய்தோர் தண்டிக்கப்படுவர்



கல்முனை என்பது எல்லோரையும் வாழவைத்த மண். இந்த மண்ணுக்கு துரோகம் செய்தவர்கள் யார் என்பதை மக்கள் தற்போது அறிந்திருக்கிறார்கள். இதற்குரிய பதிலை மக்கள் கொடுப்பார்கள்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் றஹ்மத் மன்சூர் தெரிவித்தார்.

2024 நடைபெற்று முடிந்த 10 ஆவது நாடாளுமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டியிட்டு தோல்வி அடைந்த பின்னர் நேற்று முன்தினம் விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போது காலகட்டத்தில் நாடாளுமன்றத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் மிக அவசியமானது. பலரும் பல்வேறு விதமான கருத்துக்களை முன்வைத்த நிலையில் தற்போதைய காலத்தில் நாடாளுமன்றத்தில் முஸ்லிம் பிரதிநிதிகள் சராசரியாக 22 பேர் இருக்க வேண்டிய காலமிது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்று மரம் இங்கேதான் முளைத்தது.

மர்ஹூம் எம்.எச். எம் அஷ்ரபினால் இந்த மரம் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இங்கு வாழ்த்தப்பட்டது. ஆனால் இன்று கல்முனையில் தோற்கடிக்கப்பட்டு இருப்பது என்பது மிகவும் கவலையாக இருக்கின்றது.

இவ்வாறு கல்முனையில் வளர்ந்த முஸ்லிம் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது. அதே போன்று இந்த கல்முனையில் சிலரை தூண்டிவிட்டு வெடிகளை போட்டு வெடிக்க வைத்த அரசியல்வாதியை நினைத்தால் மிகவும் கவலையாக இருக்கின்றது.

அரசியல் என்றால் ஒரு பக்கவம் இருக்க வேண்டும் நாங்கள் எமது மேடைகளில் எவரையும் தாக்கி பேசியதில்லை நாம் பிறந்த மண்ணை பாதுகாக்க வேண்டும்.

அந்த மண்ணுக்கான அபிவிருத்தி திட்டங்கள் எவ்வாறு வழங்கப்பட வேண்டும்.

பிரதேச வாதத்தை நாங்கள் எவ்வாறு ஒழிக்க வேண்டும். எப்போது நாங்கள் உண்மையாக வாழ வேண்டும். இவ்வாறான குறிக்கோள்களை முன் வைத்து தான் எமது பேச்சுக்கள் அமைந்திருந்தன.

மர்ஹூம் எம்.எச். எம் அஷ்ரபினால் இந்த மரம் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இங்கு வளர்க்கப்பட்டது. ஆனால் இன்று கல்முனையில் தோற்கடிக்கப்பட்டு இருப்பது என்பது மிகவும் கவலையாக இருக்கின்றது என்றார்.

# மக்களின் குரலாக செயற்படுவேன்

(அட்டாளைச்சேனை நிருபர்)



நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நான் மக்கள் பிரதிநிதியாகவும், சமூகத்தின் குரலாகவும் தொழிற்படுவேன். மக்கள் என்மீதும், கட்சியின் மீதும் வைத்துள்ள நம்பிக்கை வீண் போகாதவாறு எனது எதிர்காலப் பணிகள் அமையும் என்று திகாமடுல்ல மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெவ்வை பேசுகையில் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை ஜும்ஆப் பெரியவாயலில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெவ்வை மேலும் கூறுகையில்

கடந்த 2020ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மொத்தம் நான்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்த திகாமடுல்ல மாவட்டத்தில் இம்முறை தேர்தலில் 02 பேர் மாத்திரம் தெரிவு செயயப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் நானும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் சகோதரர் தாஹிரும் ஆவார்.

தேசிய மக்கள் சக்திக்கு சுமார் 50 ஆயிரம் வாக்குகளை நமது பிரதேசங்களிலிருந்து வழங்கியுள்ள போதிலும், முஸ்லிம் பிரதிநிதி தெரிவாகாது, அம்பாறை தொகுதியில் 04 பெரும்பான்மையின நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். கடந்த 1994ம் ஆண்டு தேர்தலிலிலும் இதுதான் நடைபெற்றது. நமது முஸ்லிம்களின் வாக்குகளினால் 03 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிலை வராமல் புத்திசாதுர்யமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதையே நாம் தேர்தல் பிரசாரத்தில் பிரதானமாக வலியுறுத்தினோம்.

1977ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அட்டாளைச்சேனையிலிருந்து போட்டியிட்டு வெற்றியீட்டிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் எம்.ஏ.எம். ஜலால்னுக்குப் பின்னர் கிடைத்த வெற்றி இதுவாகும். இதற்கு அட்டாளைச்சேனை மக்களினதும் ஏனைய ஊர்களிலுள்ள முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களினதும் ஒற்றுமையே பிரதான காரணமாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வெற்றிகளுக்கு அட்டாளைச்சேனை பிரதேசம் பிரதான அடித்தளமாக இருந்து வந்துள்ளது.

இம்முறையும் அட்டாளைச்சேனை மக்களின் ஒற்றுமை காணரமாக பொத்தவில் தொகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முதன்மை வெற்றியீட்டியுள்ளது.

கிடைத்துள்ள நாடாளுமன்ற பிரதிநிதித்தவத்தின் மூலம் பொத்துவில், கல்முனை,சம்மாந்துறை தொகுதி மக்களுக்கு பணியாற்ற வேண்டும். கட்சியைப் பாதுகாக்க வேண்டும் போன்ற பாரிய சுமைகள் உள்ளன. வெற்றிக்கு உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

# இளைஞர்கள் இக்காலத்தில் சமூகத்திற்காக அர்ப்பணிப்பது பாராட்டுக்குரியது



(றிஸ்வான் சாலிஹூ)

ஐகோனின் யூத்ஸ் - ஸ்ரீலங்கா அமைப்பின் செயல்திட்டங்களின் ஒன்றான அரச மற்றும் பொது நிறுவனங்களில் புதிதாக நியமிக்கப்படும் தலைவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வின் அடிப்படையில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) அண்மையில் நியமிக்கப்பட்ட இப்பாடசாலையின் முதலாவது பெண் அதிபரான ஏ.எல்.நஸ்பா இக்பாலுக்கு பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கி வைத்த நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (17) கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அமைப்பின் செயலாளர், தவிசாளர், அமைப்பாளர், ஆலோசனை சபை உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் மற்றும் பாடசாலையின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அதிபர் திருமதி.நஸீபா உரையாற்றுகையில்,

இச்சமூகத்தில் இளைஞர்கள் தங்களது நடத்தைகளை சமூகம் விரும்பாத வழிகளில் மாற்றி நடக்கும் இக்கால கட்டத்தில் சமூகத்திற்காக இந்த இளைஞர்கள் தங்களுடைய நேர காலங்களை சமூகத்திற்காக அர்ப்பணித்து வருகின்றதை பார்க்கும் போது மட்டற்ற மகிழ்ச்சியாக உள்ளது. பாடசாலையில் கற்றல் நடவடிக்கை மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது நிதி மற்றும் ஏனைய தேவைகள் ஏற்படும் நேரத்தில் அதனை பாடசாலை சமூகம் மாத்திரம் நின்று நிறைவேற்ற முடியாது. ஆனால் சமூகத்தில் நல்லது செய்கின்ற இவ்வாறான இளைஞர் அமைப்புகள் முன்வந்து பாடசாலைகளில் தேவையாக இருக்கும் தேவைப்பாடுகளை நிறைவு செய்து கொடுக்க வேண்டும் என்று அதிபர் தனதுரையில் தெரிவித்தார். அத்தோடு, சமூகத்தினதும் பெற்றோர்களினதும் நன்மதிப்பை பெற்றுள்ள இந்த அமைப்பின் இளைஞர்கள் சகமாணவர்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்து ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிக்கவர்களாகவும் இருப்பதோடு, இப்பிராந்தியத்தின் கல்வி வளர்ச்சியிலும் தங்களது நாமத்தை முத்திரை பதித்து கொள்ள வேண்டும். தேசிய ரீதியாக புகழ் பெற்ற இக்கல்லூரியின் தரத்தை பேணிப் பாதுகாத்து முன்னேற்றப் பாதைக்க இட்டுச் செல்ல வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உரித்தான கடமையாகும் என அதிபர் தனதுரையில் மேலும் தெரிவித்தார்.

# கள்ளியங்காடு மையவாடியில் மணல்மேடை அமைக்கும் பணி பூர்த்தி

(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)



மட்டக்களப்பு நகரச் சூழலில் அமைந்துள்ள கள்ளியங்காடு மையவாடியில் 20 இலட்ச ரூபாய்கள் செலவில் மணல்மேடை அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

அங்கு இடம்பெற்று வந்த மணல் மேடை அமைக்கும் பணிகள் நிறைவுற்ற நிலையில் அதனைப் பார்வையிட கடந்த சனிக்கிழமையன்று அலிஸாஹிர் மௌலானா அங்கு சென்றிருந்தார்.

கூடவே கோட்டைமுனை யூசுபியா பள்ளிவாசல் தலைவர் முன்ஷிப உட்பட நிருவாகத்தினரும் மஹல்லாவாசிகளும் சென்றிருந்தனர்.

மட்டக்களப்பு நகரில் வாழும் சகல இனங்களுக்கும் பொதுவான ஒரு அடக்கஸ்தலமாக கள்ளியங்காடு மையவாடி உள்ளது. அந்த இடத்திலுள்ள முஸ்லிம் மையவாடி பகுதியில் மழை காலங்களில் ஜனாஸாக்களை அடக்கம் செய்வது பெரும் சிரமம் நிறைந்ததாக காணப்பட்டது.

மழைக்காலத்தில் ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் அந்த இடம் ஈர நிலமாகக் காணப்படுவதால் இலை, குலை, தென்னை, ஓலை என்பவற்றை நிரப்பி ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யவேண்டியிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் கோட்டைமுனை யூசுபியா பள்ளிவாசல் நிருவாகம் முன்னாள் அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானாவின் கவனத்திற்கு கொண்டு சென்றது. அதன் காரணமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மணல் மேடை அமைக்கும் பணிகள் நிறைவுற்றுள்ளன.

# முதலாம் தரத்திற்கு உயர்வு பெற்றுள்ளார்



இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம்தர சிரேஸ்ட அதிகாரியாக கடமையாற்றி ஓய்வு பெற்ற ஏ.எல். முகமட் முக்தார் நிருவாகத்திற்கான மேன்முறையீட்டு நியாய சபையின் உத்தரவை அடுத்து 2013.01.01 முதல் இலங்கை கல்வி நிருவாக சேவை முதலாம் தரத்திற்கு முற்திகதியிட்டு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச்சேவை குழுவினால் மேற்படி பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 01.01.2016 முதல் இ.க.நி.சே- ஐ ம் தரத்திற்கு இவர் பதவி உயர்வு பெற்ற போதும் தனக்கான பதவி உயர்வில் தவறுகள் இடம்பெற்றுள்ளதாக மேன்முறையீடு செய்ததன் அடிப்படையில் இப்பதவி உயர்வு தற்போது வழங்கப்பட்டுள்ளது. 1979 ம் ஆண்டு ஆசிரியராக அரசாங்க சேவையில் இணைந்து கொண்ட இவர் 1999 ம் ஆண்டு இலங்கை கல்வி நிருவாக சேவை-11க்கு நியமனம் பெற்று 2010 முதல் அச்சேவையின்-11 ம் தரத்திற்கும் தற்போது 2013 முதல் அச்சேவையின்-1 ம் தரத்திற்கும் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கல்முனை, சம்மாந்துறை, கிண்ணியா, பட்டிருப்பு, அக்கரைப்பற்று, ஆகிய கல்வி வலயங்களில் பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய இவர் சிரேஸ்ட ஊடகவியலாளருமாவார்.

ஸ்ரீலங்கா பட்டதாரி ஆசிரியர் சங்கம், இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் ஆகிய தொழிற்சங்கங்களை ஆரம்பித்து அவற்றின் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றிவராவார்.

# கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் பவள விழா



கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 75 ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் பவள விழா சிறப்பு நிகழ்வுகள் நேற்று (18) கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு கல்லூரியின் முதுசங்களான முன்னாள் அதிபர்கள், பொறுப்பு அதிபர்கள், அதிபர் தரத்தில் உள்ள அதிபர்கள் மற்றும் தற்போது பாடசாலையில் கடமையாற்றுகின்ற அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரிய ஆசிரியைகள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்லூரி ஆரம்பித்து அதன் 75 ஆவது நிறைவினைக் கொண்டாடும் முகமாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பகிர்ந்து கொள்ளும் வகையிலான பெரிய கேக் ஒன்று வெட்டியும் மாணவர்கள் மற்றும் அதிதிகளுக்கு இனிப்புகள் வழங்கியும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் அதிபர் ஏ. பீர் முஹம்மட் பாடசாலையின் வரலாறு பற்றி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வின் போது பிரதம அதிதியாக பாடசாலையின் முன்னாள் மாணவரும் முன்னாள் அதிபருமான சட்டத்தரணி எம். சி.ஆதம்பாவா கலந்து கொண்டார்.

இப்பாடசாலையின் முன்னாள் அதிபர்களான எம்.எம்.இஸ்மாயில், ஐ.எல். ஏ. மஜீத், ஹம்ஸா, இசட். காலித், அஹமட் லெப்பை, அஸ்ஸ், பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் டாக்டர் சனூஸ் காரியப்பர் மற்றும் நிறைவேற்றிக் குழு உறுப்பினர் ரிஸ்வான், மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கண்டு இந்நிகழ்வை சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கல்முனை மாநகர சபை

# திண்மக் கழிவகற்றலில் அசமந்தப் போக்கு!

(முகம்மட் முக்தார்)

கல்முனை மாநகர சபையினால் முன்னெடுக்கப்படும் திண்மக்கழிவகற்றல் நடவடிக்கைகள் மிகவும் மந்த கதியிலும், ஒழுங்கற்ற முறையிலும் இடம்பெற்றுவருவதாக கல்முனை மாநகர வரியிறுப்பாளர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

திண்மக்கழிவகற்றலுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் இருவாரங்களுக்கொருமுறை அல்லது மாதத்திற்கொரு முறையே வீடுகளில் காணப்படும் கழிவுகளை அகற்றுகின்றன.ஆனால், பிரதான வீதிகளில் உள்ள கடைகள், ஹோட்டல்களின் கழிவுகள் தினசரி அகற்றப்படுகின்றன. உள்வீதிகளில் உள்ள வீடுகளின் குப்பை கூளங்களை தினசரி அகற்றாமையால் பல்வேறு சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுகின்றன. கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் மிகவும் நெருக்கமாகவும் இடைவெளியின்றியும் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளமையால் வீடுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை போடுவதற்கும் தரிசுநிலங்கள் எவையும் இல்லாதுள்ளன வீடுகளில் உள்ள திண்மக்கழிவுகளை மட்டும் சேகரிக்கும் கழிவகற்றுவோர் உள் வீதிகளில் காணப்படும் குப்பை கூழங்களை அகற்றாமை காரணமாக வீதி எங்கும் குப்பை கூளங்கள் பரப்பப்படுகின்றன. நாய், பூனை போன்ற பிராணிகள் குப்பைகளை வீதிமுழுவதும் இழுத்துத் திரிவதனால் அழுகிய துர்நாற்றம் வீசி சுகாதாரக்கேடும் ஏற்படுகிறது.

திண்மக்கழிவகற்றும் தொழிலாளர்களை மேற்பார்வை செய்வதற்கான உத்தியோகத்தர்கள் எவரும் அவர்களுடன் இல்லாமை காரணமாக கழிவகற்றுவோரும் ஏனோ? தானோ? என்ற மனப்பாங்கில் நடந்து கொள்கின்றனர்.

இது குறித்து முறையிட கல்முனை மாநகர சபைக்கு நிரந்தர ஆணையாளர் இதுவரை நியமிக்கப்படாமை காரணமாக தற்காலிகமாக கடமையாற்றுபவரை வரியிறுப்பாளர்கள் சந்திக்க முடியாமல் உள்ளனர். இந்த சீர்கேட்டை உரிய அதிகாரிகள் கவனத்திலெடுத்து பொதுமக்களை சுகாதார சீர்கேட்டிலிருந்து பாதுகாக்க வேண்டுமென வரியிறுப்பாளர்கள் கோருகின்றனர்.

# தேசிய மக்கள் சக்தியின் அமைச்சரவை பதவிப்பிரமாணம்



# த.மு.கூ. ஊடாக மக்களுக்கான எனது பயணம் தொடரும்

## –பாரத் அருள்சாமி



(க.கிஷாந்தன்)

பொதுத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் கிடைக்கப்பெற்ற பெறுபேறானது தற்காலிக பின்னடைவு மாத்திரமே. எனக்கான மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளதே தவிர குறையவில்லை. எனவே, மக்களுக்கான எனது பயணம் தொடரும்." – என ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற(17) ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்

அவர் மேலும் கூறியவை வருமாறு,

கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்களில் அதிகமான விருப்பு வாக்கு எனக்கே கிடைக்கப்பெற்றுள்ளது. இதன்மூலம் கண்டி மாவட்ட தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்துக்கு தகுதியானவன் நான் என்ற அங்கீகாரத்தை மக்கள் வழங்கியுள்ளனர்.

எங்களுடைய நோக்கம் இரண்டாம் கட்ட இளம் அரசியல் தலைமைகளை உருவாக்குதல். எதிர்வரும் காலங்களில் எம்மைப்போல திறமையான அரசியல் தலைமைகளை உருவாக்குவதற்கு எதிர்வரும் தேர்தல்களில் மும்முரமாக செயல்பட்டு கண்டி மாவட்டத்தில் தமிழ் அரசியலை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

பொதுத்தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவென்பது அரசியல் தோல்வி அல்ல. இந்த விருப்பு வாக்கு தேர்தல் முறைமையில் உள்ள நியதி அது. எனவே, ஏதேனும் தவறுகள் இடம்பெற்றிருப்பின் அதனையும் திருத்திக்கொண்டு மக்களுக்கான எனது பயணம் தொடரும்." – என்றார்.

# வீதி விபத்தில் குழந்தை உட்பட ஐவர் காயம்

வெல்லவாய மொனராகலை பிரதான வீதியில் வெல்லவாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டவெஹெரகல விகாரைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் சிறு குழந்தை உட்பட ஐவர் காயமடைந்துள்ளனர்.

முச்சக்கர வண்டியின் சாரதி திடீரென வீதியைக் கடந்த நபரைக் காப்பாற்ற முற்பட்ட வேளையில் குறித்த நபர் மீது முச்சக்கரவண்டி மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது. சம்பவத்தில், முச்சக்கரவண்டியில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும் வீதியைக் கடந்த நபரும் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு, இதில் மூன்று வயது குழந்தையும், 63 வயதான ஒருவரும் மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

# கண்டி நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் தமிழர்களின் அரசியல் அடையாளம்

## பேராதனை பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் சங்கம் தெரிவிப்பு

(கண்டி நிருபர்)

கண்டி மாவட்டத்தில் தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டுள்ளமையானது கவலைக்குரிய விடயமாகும் என பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

கலைப்பீட மாணவர் சங்க உபதலைவர் ஸ்ரீகாந்த் உரையாற்றிய இவ் ஊடக சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

கண்டி மாவட்ட தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவமென்பது வெறும் எம். பி. பதவி மட்டுமல்ல, அது கண்டி தமிழர்களின் அரசியல் அடையாளம். மக்களின் அபிலாஷைகள்



அதியுயர் சபையில் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்பதற்காக மக்கள் வழங்கும் அங்கீகாரம். உரிமையுடனும், உணர்வுடனும் சம்பந்தப்பட்ட உன்னதமான அரசியல் உறவு அது. எதிரணிகளில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் மீது அதிருப்தி இருந்திருக்கும் எனில், ஆளுங்கட்சியில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளரையாவது வெற்றிபெற வைக்கும் வகையில் தமது வாக்குரிமையைத் தமிழ் மக்கள் பயன்படுத்தாமை கவலைக்குரிய விடயமாகும்.

1947 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு சுமார் 4 தசாப்தங்களாக தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவமின்றி கண்டி தமிழர்கள் அரசியல் ரீதியில் அநாதைகளாக்கப்பட்டிருந்தனர். அதன்பின்னர் 1994 ஆம் ஆண்டு தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றிருந்தாலும் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அது நீடிக்கவில்லை.

அதன்பின்னர் 2000, 2001, 2004 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல்களின்போதும் கண்டி மாவட்டத்துக்கு தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெறவில்லை.

இவ்வாறு தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தின் ஆயுள் ஒரு தவணைக்கு மாத்திரம் மட்டுப்படுவதும், அதன்பிறகு பல ஆண்டுகள் இல்லாமல்போவதுமான அரசியல் நிலைமையால் அபிவிருத்தி மற்றும் உரிமைசார் விடயங்களில் கண்டி மாவட்ட தமிழ் மக்கள் இழந்தவை ஏராளம். (அந்த காலப்பகுதி அரசியல் நிலைவரம் அவ்வாறே காணப்பட்டது)

இந்நிலையில் 2015 பொதுத்தேர்தலில் கண்டி மாவட்ட தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் வென்றெடுக்கப்பட்டது. 2020 பொதுத்தேர்தலிலும் கண்டி மாவட்ட தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட்டது. தமிழ் பேசும் சமூகமாக முஸ்லிம் உறவுகளும் இதற்கு வழங்கிய பங்களிப்பு மகத்தானது.

இம்முறை கண்டி மாவட்டத்தில் தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெறவில்லை. தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளரும் வெற்றிபெறவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும் எனத் தெரிவித்தனர்.

# வாகன கொள்ளையில் ஈடுபட்ட சந்தேகநபர் கைது

மஸ்கெலிய பொலிஸ் பிரிவில், சுமார் 83 இலட்சம் பெறுமதியான வேன் ஒன்று கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் ஹட்டன் வலய குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கஹவத்த பொலிஸ் பிரிவில் ஓபாவத்த பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கைதான சந்தேகநபர் 28 வயதுடைய ஓபாவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாக குறித்த வேன் வவுனியா பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் வலய குற்ற விசாரணைப் பிரிவினர் மற்றும் மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உண்மைக்குப் புறம்பான செய்திகளை பரப்ப வேண்டாம்

## தமிழக வெற்றிக் கழக பொதுச்செயலாளர்



நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாட்டில், கட்சிக் கொள்கைகள், கொள்கை எதிரி, அரசியல் எதிரி போன்றவற்றின் நிலைப்பாடுகள் குறித்து தெளிவாக தனது உரையில் எடுத்துரைத்தார்.

அதன்படி, 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டமன்ற தேர்தலில் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று ஆட்சி அமைப்பதற்கான அனைத்து உத்திகளையும் வகுத்து தேர்தலை எதிர்கொள்ள தமிழக வெற்றிக் கழகம் தயாராகி வருகிறது.

இதன்படி, எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் தமிழக வெற்றிக் கழகம் கூட்டணி அமைக்கும் என்று பிரபல நாளிதழ் ஒன்று உண்மைக்குப் புறம்பான செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் தமிழக வெற்றிக் கழக பொதுச் செயலாளர் என்.ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

“இச் செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இதற்கு எந்த ஆதாரமோ, அடிப்படையோ இல்லை.

ஊடகங்கள் மற்றும் சமூக ஊடங்களினூடாக விமர்சனம் எனும் பெயரில் உள்நோக்கத்தோடு பரப்பப்படும் இதுபோன்ற பொய்யான கருத்துக்களை தமிழக மக்கள் புறக்கணித்து விடுவார்கள் என்பதை இவ்வாறான பொய்யான செய்திகளை பரப்புபவர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

தமிழக வெற்றிக் கழகத்தின் முக்கிய குறிக்கோள், பெரும்பான்மை பலத்தோடு நாட்டு மக்களின் பேராதரவோடு தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கான நல் அரசை அமைப்பதே.

எனவே, மக்களைக் குழப்பும் நோக்கில் இதுபோன்ற செய்திகள் வெளியிடுவதை ஊடகங்கள் தவிர்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்” என அதில் கூறப்பட்டுள்ளது.



# மின்னல் தாக்கியதில் பெண் உயிரிழப்பு

இந்தியாவின், புதுக்கோட்டை மாவட்டம், விளாப்பட்டி பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பகுதியில் இரண்டு நாட்களாக மழை பெய்து வந்துள்ளது. சம்பவ தினத்தன்றும் குறித்த பெண் அவரது வீட்டின் அருகிலுள்ள காட்டுப் பகுதியில் கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது இடியுடன் கூடிய மழை பெய்துள்ளது. இதனால் அருகிலிருந்த புளிய மரத்தின் கீழ் ஒதுங்கியிருந்துள்ளார்.

அச்சமயம் பலத்த சத்தத்துடன் இடியுடன் மின்னல் தாக்கியதில் குறித்த பெண் சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.



# நாளை திருமணம் மணமகன் தற்கொலை

இந்தியாவின் கடலூர், திருப்பாதிரிப்புலியூர் சுப்புராய வீதியைச் சேர்ந்த பிரசாத் என்பவர் கப்பல் பொறியியலாளராக கடமையாற்றி வந்துள்ளார்.

இவருக்கும் சென்னையைச் சேர்ந்த பெண்ணுக்கும் நாளை புதன்கிழமை திருமணம் செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், சனிக்கிழமை இரவு உணவு அருந்திவிட்டு தனது அறைக்கு உறங்கச் சென்றுள்ளார் பிரசாத். ஞாயிற்றுக்கிழமை காலை நீண்ட நேரமாகியும் பிரசாத்தின் அறைக் கதவு திறக்கப்படாமல் இருந்ததால், அவரது தந்தை அறைக்குச் சென்றுள்ளார்.

அப்போதுதான் பிரசாத் மின்விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.



சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து, விரைந்து வந்து உடலை கைப்பற்றி உடற்கூற்று ஆய்வுக்காக கடலூர் அரச மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் மணமகனின் இத் திடீர் மரணத்துக்கான காரணம் குறித்து, பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மெகா தொலைக்காட்சி தொடர்களை தடை செய்ய வேண்டும்

## கேரள மகளிர் ஆணைக்குழு




இந்தியாவின், கேரள மாநிலம் திருவனந்தபுரம், மலப்புரம், கோட்டயம் ஆகிய மாவட்டங்களில் 13 முதல் 19 வயதுக்கு உட்பட்டவர்களிடம் தொலைக்காட்சி தொடர்கள் குறித்த ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது.

அந்த ஆய்வில் 43 சதவீதமானோர் தொடர்கள் தவறான செய்திகளை தெரிவிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மேலும் 57 சதவீதமனோர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் கருப்பொருள் மற்றும் உள்ளடக்கத்தில் மாற்றம் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

இவ் ஆய்வின் முடிவில் குழந்தைகள் ஒழுக்கக் கேடான மற்றும் எதிர்மறை கதாபாத்திரங்களை பின்பற்றுவதும் தெரிய வந்துள்ளது.

எனவே, மலையாள தொலைக்காட்சி தொடர்களை ஒழுங்குப்படுத்துவதோடு, மெகா தொடர்களையும் தடை செய்ய வேண்டும் என்று கேரள மகளிர் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இது தொடர்பில் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ள விடயங்களாவன,

தொலைக்காட்சியில் அன்றாடம் ஒளிபரப்பாகும் மெகா தொடர்களை நிறுத்த வேண்டும். மேலும் ஒரு அத்தியாயத்தின் எண்ணிக்கை 20 முதல் 30 வரை இருக்குமாறு குறைக்கப்பட வேண்டும்.

ஒரு தொலைக்காட்சி ஒரு நாளைக்கு இரண்டு தொடர்களை மட்டுமே ஒளிபரப்ப வேண்டும்.

தொடர்களை மறு ஒளிபரப்பு செய்யக்கூடாது.

நிகழ்ச்சிகளை ஆய்வு செய்வதற்கு தணிக்கை வாரியம் அல்லது புதிய சிறப்பு வாரியம் பொறுப்பேற்க வேண்டும்.

இளையோர்கள் பார்ப்பதற்கு பொருத்தமானதாக இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்வதே இதன் நோக்கம்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தவறான வார்த்தைகள் இடம்பெறுவதை தடை செய்ய வேண்டும்.

பெண்களை இழிவாக சித்தரிக்கக் கூடாது.

ஆபாசமான உள்ளடக்கங்கள் பரவுவதை தடுக்க கடுமையான விதி முறைகளை அமுல்படுத்த வேண்டும்”

இவ்வாறு அதில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



# பிணை கோரி: கஸ்தூரி மனுத் தாக்கல்

சென்னையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றின்போது தெலுங்கு பேசும் பெண்கள், திராவிடர்கள் தொடர்பில் நடிகை கஸ்தூரி அவதூறு கருத்துக்களை கூறியதாக அவர் மீது திருநகர் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்நிலையில், நடிகை கஸ்தூரி சென்னை உயர்நீமன்ற மதுரை அமர்வில் முன் பிணை வேண்டும் என்று மனுத் தாக்கல் செய்திருந்தார்.

ஆனால், அது தள்ளுபடி செய்யப்பட்டது.

இவ்வாறிருக்க நடிகை கஸ்தூரி தலைமறைவாகியிருந்த நிலையில் அவரைப் பிடிப்பதற்கு இரண்டு தனிப்படைகள் அமைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஹதராபாத்தில் வைத்து கைது செய்யப்பட்ட நடிகை கஸ்தூரிக்கான விசாரணைகள் நிறைவுற்று அவர் எழும்பூர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இம் மாதம் 29 ஆம் திகதி வரையில் கஸ்தூரி நீதிமன்றக் காவலில் இருக்க வேண்டும். இதையடுத்து அவர் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நடிகை கஸ்தூரி பிணை கோரி எழும்பூர் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை மனு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எல்லையைத் தாண்டிய பகிடிவதை மாணவன் உயிரிழப்பு

இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் தார்பூர் பதான் பகுதியில் மருத்துவ கல்லூரியொன்று செயற்பட்டு வருகிறது.

இக் கல்லூரியில் அனில் மெதானியா என்பவர் முதலாமாண்டு கல்வி கற்பதற்காக சேர்ந்துள்ளார்.

இந்நிலையில் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் சிலர் முதலாம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் சிலரை அழைத்து பகிடிவதையில் ஈடுபட்டுள்ளனர்.

பகிடிவதை எனும் பெயரில் அனிலை மூன்று மணிநேரம் ஒரே இடத்தில் நிற்கும்படி கூறியுள்ளனர்.

இதில் மயக்கமுற்ற அனில் சுயநிலை இழந்து கீழே விழுந்துள்ளார்.

உடனே அனில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதில் தொடர்ந்து அவரை மூன்று மணித்தியாலங்கள் ஒரே இடத்தில் நிற்க வைத்தமை தெரிய வந்துள்ளது.

இதனை கூறியதும் அனில் உடனே உயிரிழந்துவிட்டார்.

அவரது உடலை கைப்பற்றிய பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.



உடற் கூற்று அறிக்கை வெளிவந்த பின்னரே மரணத்துக்கான காரணம் பற்றி தெரிய வரும்.

இதன்படி இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரயில் கவிழ்ப்பு சதி: தண்டவாளத்தில் சீமெந்து பலகை மற்றும் இரும்பு கம்பி

இந்தியாவில் ரயில்களை கவிழ்க்கும் சதி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

அதன்படி, உத்தரப் பிரதேச மாநிலம் பரேலி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை சரக்கு ரயில் ஒன்று சென்றுள்ளது. அப்போது அங்குள்ள தண்டவாளத்தில் சீமெந்து பலகை மற்றும் இரும்பு கம்பி வைக்கப்பட்டிருந்ததை கண்ட ரயில் சாரதி, அவசரகால தடுப்பின் மூலம் ரயிலை உடனடியாக நிறுத்தியுள்ளார். இதனால் எதுவித விபத்தும் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தகவல் அறிந்து வந்த ரயில்வே ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் தண்டவாளத்தில் வைக்கப்பட்டிருந்த சீமெந்து மற்றும் இரும்பு கம்பியை அகற்றியுள்ளனர்.

பின்னர் ரயில் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

இவ்வாறு ரயில்களை கவிழ்ப்பதற்கான சதி வேலைகளை செய்பவர்கள் யார் என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# லெபனானின் சுகாதார அமைப்புகளை குறித்து வைத்து தாக்கும் இஸ்ரேல்



இஸ்ரேலிய இராணுவம் லெபனானில் உள்ள சுகாதார வசதிகள் மற்றும் மருத்துவ பணியாளர்களை மீண்டும் மீண்டும் குறிவைத்து தாக்குவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நவம்பர் 15ஆம் திகதி நிலவரப்படி, இஸ்ரேல் குறைந்தது 208 சுகாதாரத் துறை ஊழியர்களைக் கொன்றுள்ளதாகவும் 311 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் லெபனானின் பொது சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மருத்துவமனைகள் மீதான 66 தாக்குதல்கள் மற்றும் அவசர மருத்துவ சேவைகள் மீதான 220 தாக்குதல்கள் உட்பட, சுகாதார சேவைகள் மீதான இஸ்ரேலிய தாக்குதல்கள் குறைந்தது 286ஐ அமைச்சகம் பதிவு செய்துள்ளது.

இதன் விளைவாக, சுமார் 40 மருத்துவமனைகள் சேதமடைந்து ள்ளதுடன், எட்டு செயல்படாமல் உள்ளன, மேலும் 249 அவசரகால வாகனங்கள் சேதமடைந்துள்ளன. வியாழனன்று, லெபனானின் கிழக்கு பால்பெக் பகுதியில் உள்ள சிவில் பாதுகாப்பு மையத்தின் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் குறைந்தது 12 மருத்துவர்கள் உயிரிழந்துள்ளனர்.

லெபனானில் கடந்த ஒக்டோபரில் இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையே போர் தொடங்கியதில் இருந்து இஸ்ரேல் குறைந்தது 3,452 பேரைக் கொன்றதுடன் 14,664 க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

சுகாதாரத் தாக்குதல்கள் எங்கு நடைபெறுகின்றன? லெபனானின் மருத்துவமனைகள் மீதான 66 இஸ்ரேலிய தாக்குதல்களில் பெரும்பாலானவை நாட்டின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளிலும் தலைநகர் பெய்ரூட்டிலும் நடந்துள்ளன, சில மருத்துவமனைகள் பலமுறை தாக்கப்பட்டன.

இதன் காரணமாக குறைந்தபட்சம் எட்டு மருத்துவமனைகளை மூட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, அவற்றில் பாதி மேற்கு லெபனானில் உள்ள பாப்தா மாவட்டத்தில் உள்ளதாக சுகதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.




# ஷேக் ஹசீனாவை இந்தியா நாடு கடத்த வேண்டும்

ஷேக் ஹசீனாவை இந்தியா நாடு கடத்த வேண்டும் என பங்களாதேஷ்ன் இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முகமது யூனுஸ் தனது ஆட்சியின் 100 நாட்களை நிறைவு செய்ததை முன்னிட்டு, நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.



"சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் குறித்து அரசாங்கம் விசாரணை நடத்தி வருகிறது. மாணவர்கள் நடத்திய போராட்டத்தின் போது ஒவ்வொரு கொலையிலும் நாம் நீதியை உறுதி செய்ய வேண்டும்.

போராட்டத்தின் போது, 1,500 பேர் கொல்லப்பட்டனர். 19,931 பேர் காயமுற்றனர். ஒவ்வொரு மரணம் பற்றிய தகவலையும் சேகரிப்பதில் எங்கள் அரசாங்கம் மிகவும் கவனமாக இருக்கிறது.

இந்நிலையில், பிரதமர் பதவியை ராஜினாமா செய்து விட்டு, இந்தியாவுக்கு தப்பி சென்ற, பிரதமர் ஷேக் ஹசீனாவை இந்தியா நாடு கடத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறுபான்மையினர் உட்பட அனைத்து சமூக மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் தனது அரசாங்கம் தொடர்ந்து செய்து வருகிறது.

# "இந்தியா மீது வரி விதிப்பது வர்த்தகப் போருக்கு வழிவகுக்கும் "



இந்தியா மீது வரி விதிப்பது இரு நாடுகளுக்கு இடையே வர்த்தகப் போருக்கு வழி வகுக்கும் என்பதால் அதை எதிர்ப்பதாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் சுஹாஸ் சுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.

புதிய ட்ரம்ப் நிர்வாகம் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதல் வரி விதிக்கலாம் என்ற சாத்தியக்கூறுகளுக்கு மத்தியில் சுப்ரமணியனின் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

"இந்தியா மீது வரி விதிப்பதை நான் ஆதரிக்கவில்லை. அது மிகவும் மோசமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அது வர்த்தகப் போருக்கு வழிவகுக்கும். இரு நாடுகளுக்கும் இது நல்லதல்ல என்று நான் நினைக்கவில்லை" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர், ட்ரம்ப் இந்தியாவின் கட்டண கட்டமைப்பை கேலி செய்து, சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்கு பரஸ்பர வரி விதிப்பது குறித்து பேசினார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்க உள்ளதால், இந்திய ஏற்றுமதி பொருட்களுக்கு கூடுதல் வரி விதிக்க வாய்ப்பு உள்ளது.

பல இந்தியத் தொழில்களில் பெரும் பணியாளர்கள் உள்ளனர். பல இந்திய நிறுவனங்கள் அமெரிக்காவில் விரிவடைந்து வருகின்றன.

எனவே நமது நாடுகள் பொருளாதார ரீதியில் எந்த அளவுக்கு ஒன்றிணைந்து செயல்படுகிறதோ அவ்வளவுக்கு நாம் வலுவாக இருப்போம். உதாரணமாக இந்தியா மிகப்பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்றாகும்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு என்பது மிகவும் முக்கியமானது" என்றும் சுப்பிரமணியம் கூறினார்.

ட்ரம்ப் நிர்வாகத்தின் பாரிய கூட்டாட்சி வேலைகளை குறைக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் தான் எதிர்ப்பேன் என்று சுப்ரமணியம் கூறினார், மேலும் கூட்டாட்சி பணியாளர்களின் சாம்பியனாக இருக்க விரும்புவதாக கூறினார்.

அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினராகப் பதவியேற்கத் தயாராகும் சுப்பிரமணியம், உலகம் முழுவதும் ஜனநாயகத்தை வளர்க்க விரும்புவதாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை, 38 வயதான சுப்ரமணியம், அமெரிக்க பிரதிநிதிகள் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறாவது இந்திய-அமெரிக்கர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அனுமதி வழங்கியது அமெரிக்கா

## ரஷ்யாவை ஏவுகணை மூலம் தாக்க தயாராகும் உக்ரைன்



அமெரிக்கா வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை பயன்படுத்தி ரஷ்யா மீது தாக்குதல் நடத்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உக்ரைனுக்கு அனுமதி அளித்துள்ளார்.

இதன் மூலம் அமெரிக்காவின் கொள்கையில் தற்போது பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளன நிலையில், எதிர்வரும் நாட்களில் ரஷ்யாவை உக்ரைன் நீண்ட தூர ஏவுகணைகள் மூலம் தாக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் மேலதிக விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

எவ்வாறாயினும், வெள்ளை மாளிகை இந்த விடயம் தொடர்பில் இன்னும் பதிலளிக்கவில்லை. அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்க உள்ள நிலையில், பைடன் இந்த தீர்க்கமான முடிவை அறிவித்துள்ளார்.

முன்னதாக, போர்க்களத்தில் வடகொரியப் படைகளை ரஷ்யா நிறுத்தியது. இதன் மூலம் தனது கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த காலங்களில் ரஷ்யாவுக்கு எதிராக வான் பாதுகாப்பு அமைப்புகளை பயன்படுத்த அனுமதி வழங்க வேண்டும் என உக்ரைன் ஜானாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கிடையில், டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிக்கு வந்தால் பைடனின் முடிவு மாறுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இந்நிலையில், உக்ரைனுக்கு வழங்கப்பட்ட இராணுவ மற்றும் பொருளாதார கொள்கைகளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எட்டு ரஷ்ய ஆளில்லா விமானங்களை ஒரே இரவில் சுட்டு வீழ்த்தப்பட்டது

இதேவேளை, உக்ரைனின் வான் பாதுகாப்புப் படையினர் ரஷ்யாவினால் ஏவப்பட்ட 11 ஆளில்லா விமானங்களில் 8 விமானங்களை ஒரே இரவில் சுட்டு வீழ்த்தியதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது.

இந்த ஆளில்லா விமானங்கள் பொல்டாவா, கார்கிவ், செர்காசி, செர்னிஹிவ் மற்றும் கெய்வ் பகுதிகளில் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே இரவில் ரஷ்ய தாக்குதல்களால் குறைந்தது 11 பேர் கொல்லப்பட்டதாக சுமியில் உள்ள அதிகாரிகள் கூறுகின்றனர்.

சுமியில் உள்ள அதிகாரிகள், ரஷ்ய ஏவுகணை ஒன்று இரவோடு இரவாக நகரின் குடியிருப்புப் பகுதியைத் தாக்கியதாகக் கூறுகின்றனர்.

இந்த தாக்குதலில் 63 பேர் காணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரான் உச்ச தலைவர் அலி கொமேனி கோமா நிலையில்?




ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலிகொமேனி கோமா நிலைக்குச் சென்றுவிட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை ஈரானிய தூதரை சந்தித்துள்ள புகைப்படம் வெளியாகியுள்ளது.

அவர் கோமா நிலையில் இருப்பதாக சமூக ஊடகங்களில் வெளியாக பரவலான ஆதாரமற்ற செய்திகளுக்கு மத்தியில் வெளியிடப்பட்டுள்ள புகைப்படம் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

லெபனானில் உள்ள ஈரானின் தூதர் மோஜ்தபா அமானியுடன் கொமேனி தனது அலுவலகத்தில் கலந்துரையாடுவதை குறித்தப் புகைப்படம் காட்டியுள்ளது.

ஹிஸ்புல்லா பயங்கரவாதக் குழுவிற்கு எதிரான இஸ்ரேல் கடந்த செப்டம்பர் மாதம் பெய்ரூட்டில் மேற்கொண்ட பேஜர் தாக்குதல்களில் அமானி காயமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்பு குறித்து எக்ஸ் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில்,

"இஸ்லாமியப் புரட்சியின் உச்ச தலைவரான அயதுல்லா கமேனி, லெபனானில் உள்ள ஈரான் இஸ்லாமியக் குடியரசின் மூத்த தூதர் மோஜ்தபா அமானியை நேற்று நண்பகல் சந்தித்து பேசினார்" என்று அந்த பதிவில் கூறப்பட்டுள்ளது.

85 வயதான ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலிகொமேனி உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகவும், அவர் கோமா நிலைக்கு சென்றுள்ளதாகவும், தனது 55 வயது மகன் மோஜ்தபா கொமேனியை அடுத்த தலைவராக நியமிக்கப்படுள்ளதாகவும் சமூக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே, குறித்தப் புகைப்படம் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நியூசிலாந்துக்கு எதிராக ஒருநாள் தொடரை வென்றது இலங்கை

## 12 வருடங்களின் பின்னர் சாதனை: இறுதி ஒருநாள் போட்டி இன்று



(அரபாத் பஹுர்தீன்)

நியூசிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் பேட்டியில், டக்வேர்த் லூயிஸ் முறைப்படி மூன்று விக்கெட்டுகளால் வெற்றிபெற்ற இலங்கை அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரையும் கைப்பற்றியுள்ளது.

கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற இலங்கை அணி12 வருடங்களின் பின்னர் நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை கைப்பற்றி வரலாறு படைத்தது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலை பெற்றிருந்தது.

இந்நிலையில் தொடரின் தீர்மானிக்க இரண்டா போட்டி நேற்று முன்தினம் பகலிரவு ஆட்டமாக கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை நியூசிலாந்து அணிக்கு வழங்கியிருந்தது. இதன்படி, அந்த அணி 45.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 209 ஓட்டங்களை பெற்றிருந்தது.

அந்த அணி சார்பில் மார்க் சாப்மேன் 76 ஓட்டங்களையும், மிட்செல் ஹேய் 49 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். பந்துவீச்சில் தீக்சன மற்றும் வெண்டர்சே ஆகியோர் தலா மூன்று




விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர்.

இதனை தொடர்ந்து 210 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஏழு விக்கெட்டுகளை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்று வெற்றியடைந்தது.

குசல் மெண்டிஸ் ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். நியூசிலாந்து அணி சார்பில் மைக்கேல் பிரேஸ்வெல் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

இந்த வெற்றியுடன் மூன்றுப் போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2-0 என்ற கணக்கில் இலங்கை அணி முன்னிலைப் பெற்றுள்ளதுடன், தொடரையும் கைப்பற்றியுள்ளது.

மேலும் நியூசிலாந்து அணிக்கு எதிராக ஒருநாள் தொடரை 12 வருடங்களுக்கு பின்னர் கைப்பற்றி வரலாற்றை மாற்றியெழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி இன்று பகலிரவு ஆட்டமாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'இது ஆச்சரியமாக இருக்கிறது'

## ஏடிபி பட்டத்தை வென்றார் சின்னர்



அமெரிக்காவின் டெய்லர் ஃபிரிட்ஸுக்கு எதிரான இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் ஜானிக் சின்னர் ஏடிபி டென்னிஸ் தொடரில் பட்டத்தை வென்ற முதல் இத்தாலியர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

உலகின் முதல்நிலை வீரரான சின்னர் இந்த ஆண்டை வெற்றியுடன் முடித்துக்கொண்டுள்ளார். ஐந்தாவது இடத்தில் உள்ள ஃபிரிட்ஸை 6-4, 6-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி வெற்றிபெற்றுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம், 1986ஆம் ஆண்டு இவான் லெண்டலுக்குப் பிறகு ஒரு செட்டை இழக்காமல் ஏடிபிஇறுதிப் போட்டியில் பட்டத்தை வென்ற முதல் வீரர் என்ற பெருமையையும் பெற்றுக்கொண்டார்.

ஏடிபி எனப்படும் ஆண்கள் டென்னிஸ் சாம்பியன் ஷிப் போட்டி இத்தாலியின் டுரின் நகரில் கடந்த 10ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்தப் போட்டி நேற்றுடன் முடிவடைந்தது.

இந்தப் போட்டியில் ஒற்றையரில் தரவரிசையில் முதல் எட்டு இடத்தில் உள்ள வீரர்களும், இரட்டையர் பிரிவில் முதல் எட்டு இடத்தில் உள்ள ஜோடியினரும் பங்கேற்றனர். இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் முதல் நிலை வீரரான இத்தாலியின் ஜானிக் சின்னர், அமெரிக்காவின் டெய்லர் ஃபிரிட்ஸ் உடன் மோதினார்.

இதில் சின்னர் 6-4, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்று அசத்தினார். "இது மிகவும் விசேடமான ஒன்று. இது என் தரப்பிலிருந்து மிக உயர்ந்த அளவிலான போட்டியாகும். சில நேரங்களில் என்னால் சிறப்பாக விளையாடியிருக்க முடியாது, அனாலும் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்."

"இது ஆச்சரியமாக இருக்கிறது, ஏனெனில் இத்தாலியில் எனது முதல் பட்டம், இது எனக்கு மிகவும் அர்த்தம் நிறைந்தது" என்று போட்டி முடிந்த பின்னர் சின்னர் தெரிவித்திருந்தார்.

# இத்தாலியை வீழ்த்தியது பிரான்ஸ்

ருநுகுயு நேஷன்ஸ் லீக் போட்டியில் இத்தாலி அணியை வீழ்த்தியதன் மூலம் பிரான்ஸ் அணி குழு இரண்டின் தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ளது.

இந்தப் போட்டியின் பிரான்ஸ் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றிருந்தது.

மிலன் சான் சிரோ மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்தில் பிரான்ஸ் முன்னிலை பெற்றது. லூகாஸ் டிக்னேவின் கார்னர் கிக்கை அட்ரியன் ராபியோட் தலையால் முட்டி கோலாக மாற்றினார். போட்டியின் 33வது நிமிடத்தில் பிரான்ஸ் அணிக்கு மீண்டும் ஒரு கோல் கிடைக்க 2-0 என்ற ரீதியில் முன்னிலைப் பெற்றது. எனினம், இரண்டு நிமிட இடைவெளியில் இத்தாலி அணியின் காம்பியாசோ கோல் அடித்தார்.

இதனால் முதல் பாதியில் பிரான்ஜ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் முன்னிலைப்பெற்றது. பின்னர் இரண்டாம் பாதி ஆட்டத்தின் போது 65வது நிமிடத்தில் அட்ரியன் ராபியோட் பிரான்ஸ் அணிக்கா மற்றுமொரு கோல் அடித்தார்.

இதனால் 3-1 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணி முன்னிலைப் பெற்றது. தொடர்ந்தும் கோல் அடிக்கும் முயற்சியில் இத்தாலி வீரர்கள் ஈடுபட்ட போதிலும் அது பலனளிக்கவில்லை.

இறுதியில் பிரான்ஸ் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றதுடன், குழு இரண்டில் 13 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்துள்ளது.

இத்தாலி அணி ஆறு புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# டாடா ஸ்டீல் செஸ் சாம்பியன்

## - பட்டம் வென்றார் கார்ல்சன்



டாடா ஸ்டீல் செஸ் தொடரில் நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சன் சாம்பியன் பட்டம் வெற்றுள்ளார். இது நடப்பு ஆண்டில் அவர் பெற்றுக்கொண்ட பட்டமாகும். மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் டாடா ஸ்டீல் இந்தியா சர்வதேச செஸ் தொடர் நடைபெற்றது. இதில் பிளிட்ஸ் பிரிவு 18 சுற்றுகளாக நடந்தது.

இதில் நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சன், இந்தியாவின் பிரக்ஞானந்தா உள்பட பல முக்கிய வீரர்கள் பங்கெடுத்திருந்தனர்.

இந்நிலையில், 18 சுற்றுகளின் முடிவில் 9 வெற்றி, 8 சமநிலை, ஒரு தோல்வி என 13 புள்ளிகளுடன் கார்ல்சன் சாம்பியன் பட்டம் வென்றார். இந்தத் தொடரின் ரேபிட் பிரிவிலும் கார்ல்சன் சாம்பியன் பட்டம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் ருதுராஜ் கெய்க்வாட்டுக்கு வாய்ப்பு மறுப்பு



இந்திய அணியின் இளம் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ருதுராஜ் கெய்க்வாட்டுக்கு மீண்டும் வாய்ப்பு மறுக்கப் பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியா அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. முதல் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில், இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா விடுப்பு எடுத்துக்கொண்டுள்ள நிலையில், மற்றுமொரு இளம் நட்சத்திர வீரரான சுப்மன் கில்லுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அவர்கள் முதல் போட்டியில் விளையாட மாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், முதல் போட்டியின் ஜஸ்பிரித் பும்ரா இந்திய அணிக்கு தலைமை தாங்குவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்மா மற்றும் சுப்மன் கில்லுக்கு மாற்றாக யாரை விளையாட வைப்பது என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த நிலையில், தேவ்தத் படிக்கல் மற்றும் சாய் சுதர்சன் ஆகியோரில் ஒருவரை முதல் டெஸ்ட் போட்டிக்கான அணியில் சேர்க்க முடிவு செய்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அவர்கள் இருவரும் அவுஸ்திரேலியா அணிக்கு எதிராக இந்தியா ஏ அணி ஆடிய பயிற்சிப் போட்டியில் சிறப்பாக ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டதால் இந்த முடிவு எடுக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அந்தப் பயிற்சிப் போட்டியில் ருதுராஜ் கெய்க்வாட் மட்டுமே மற்ற துடுப்பாட்ட வீரர்களை விட அதிக நேரம் தாக்குப் பிடித்து ஆடியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால் ருதுராஜ் கெய்க்வாட்டுக்கு முதல் போட்டியில் வாய்ப்பளிக்கப்பட வேண்டும் எனவும், எனினும், திட்டமிட்ட வகையில் அவருக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எந்த நிலையிலும் இறங்கி சிறப்பாட விளையாடக் கூட்டிய ருதுராஜ் கெய்க்வாட் ஏற்கனவே டி20 அணியில் இருந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐபிஎல் தொடரி சென்னை அணியின் தலைவராக ருதுராஜ் கெய்க்வாட் இருந்து வருகின்றார். அவரின் தலைமைத்துவ பண்பு மிகவும் பேசப்படுகின்றது.

சிறப்பான தலைமை பண்பு காரணமாக இந்தியா ஏ அணியின் தலைவராகவும் ருதுராஜ் கெய்க்வாட் செயற்படுகின்றார். அப்படி இருந் தும் ருதுராஜுக்கு இந்திய டெஸ்ட் அணியில் இதுவரை வாய்ப்பு அளிக்கப்படவில்லை. இதன் பின்னணியில் ருதுராஜின் தலைமைப் பண்புதான் பெரிய பிரச்சனையாக உள்ளதுதாகவும், அதனை தவிர்க்கவே ருதுராஜ் கெய்க்வாட் அணியில் இருந்து புறக்கணிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 நவம்பர் 19ம் திகதி செவ்வாய்க்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.